விலை: 30.00
பக்கங்கள் : 12+12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 028 வள்ளுவர் ஆண்டு 2053 தை 03 ஞாயிற்றுக்கிழமை (16.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நாட்டையும் மக்களையும் மீட்போம்

## ஐ.தே.க தலைவர் ரணில் உறுதி



(கொழும்பு)

இவ்வருடத்தில் முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க உறுதிகொள்வதாக ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியபோதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

அடுத்துவரும் எந்தவொரு அரசாங்கத்திற்கும் நாட்டை நிர்வகிக்க முடியாதளவிற்கு நெருக்கடியான நிலைமையே உருவெடுத்துள்ளது.

மக்கள் மத்தியில் புதிய எதிர்பார்ப்புகள் தொடர்பில் நம்பிக்கை எழுந்துள்ளது. தற்போதை அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பும் ஐக்கிய தேசிய கட்சி மீதான நம்பிக்கையும் இங்கு முக்கியமானதொன்றாகும்.

எனவே ஆட்சி மாறினாலும் தேசிய 11

# தமிழர்களின் நலனுக்காக இந்தியா துணைநிற்கும்

## இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே



(கொழும்பு)

இந்திய அரசாங்கம் தமிழர் நல்வாழ்வுக்காக என்றென்றும் துணைநிற்கும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

( 11ஆம் பக்கம் பார்க்க)

## லொக்டவுண் சொல்லுக்கு இனித் தடை

(கொழும்பு)

லொக்டவுண்" (முடக்கம்) என்ற சொல்லைத் தடை செய்யப்பட்ட சொல்லாகப் 11

## இலங்கையின் பங்காளியாக இந்தியா எப்போதும் இருக்கும்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் டுவிட்

(கொழும்பு)

இலங்கையின் உறுதியான நம்பகமான பங்காளியாக இந்தியா எப்போதும் இருக்கும் என இந்தியா வெளிவிவகார 11


Dr. S. Jaishankar
@DrSJaishankar
Just concluded a detailed virtual meeting with Sri Lankan Finance Minister @RealBRajapaksa.
Reaffirmed that India will be a steadfast and reliable partner of Sri Lanka.

## கொரோனா 07 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 07 கோவிட் மரணங்கள் 11

## இலங்கையில் மேலும் 160 'ஒமிக்ரோன்' தொற்றாளர்கள் அடையாளம்

03

## தேர்தல் வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவேன்

### ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் தாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் நிச்சயம் நிறைவேற்றுவதாக 11

## 4 ஆவது தடுப்பூசி தொடர்பில் அரசு அவதானம்

### அமைச்சர் கெஹலிய



(கொழும்பு)

கொரோனாவுக்கு எதிரான நான்காவது தடுப்பூசி டோஸ் தேவைப்பட்டால் அதனை வழங்குவற்கு அரசு கவனம் செலுத்தியுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் 11

## இலங்கைக்கு உதவ எப்போதும் சீனா தயார்

### சீன வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

08

## ஆசியக் கண்டத்தில் சுற்றுலாவுக்கு பாதுகாப்பான நாடாக இலங்கை தெரிவு

(கொழும்பு)

ஆசியக் கண்டத்தில் சுற்றுலாத் துறைக்கு பாதுகாப்பான நாடாக இலங்கை இருப்பதாக உலக சுற்றுலா ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இது எமது நாட்டின் சுற்றுலாத் துறைக்கு கிடைத்த அங்கீகாரம் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## GROUP CLASS

O/L பரீட்சைக்கு
தோற்றும் மாணவர்களுக்கு
துரிதமீட்டல் வகுப்பு

வரலாறு, புவியியல், குடியியல்,
சைவசமயம், கணிதம்

Zoom / நேரடி வகுப்பு

**தரம் 3 - 5 மாணவர்களுக்கு**
சுற்றாடல், கணிதம், தமிழ்

Zoom / நேரடி வகுப்பு

A/L 2022 / 2023 மாணவர்களுக்கு
அரசியல், வரலாறு,
இந்துசமயம், இந்து நாகரிகம் (9618)

Zoom / நேரடி வகுப்பு

அனுபவம் வாய்ந்த ஆசிரியரால்
கற்பிக்கப்படும்.

**076 977 9392**
**076 645 9287**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில்
இருவர் கொண்ட குடும்பத்திற்கு
வாடகைக்கு வீடு தேவை. (9676)

**077 262 7890**
**076 977 4628**

## சந்நிதி அக்கடமி

மானிப்பாய்

O/L தோற்றுவோருக்கான
ஆங்கில வகுப்புக்கள்
ஆரம்பமாகின்றன. (9687)

**077 767 7773**

## +661

(கொழும்பு)

நாட்டில் நேற்றைய தினம் மேலும் 661 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் புது வருட கொவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் மற்றும் வெளி நாடுகளில் இருந்து வந்தவர்கள் அடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள கொவிட் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 595,657 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## துயர் பகிர்கின்றோம்



பிறப்பு 07.06.1967 இறப்பு 14.01.2022

எமது கல்லூரியின்
சிரேஷ்ட மாணவ முதல்வன்
**மனோஜன்**
அவர்களின்
அன்புத் தாயார்
அமரர்
திருமதி
**விஜயகுமாரி சிறீஸ்கந்தராஜா**
அவர்களின் பிரிவுச் செய்தியறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரினைப் பகிர்ந்துகொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**மாணவர் முதல்வர் சபை**
**யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி** (C-3550)

## மணிவிழா வாழ்த்து



யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரியின்
தரம் 6, 7 இற்கான பகுதித் தலைவர்
திருமதி
**விமலேஸ்வரி பாலச்சந்திரன்**

சேவைக் காலம் :

1. மு/ றோ. க. த. பாடசாலை : 02.05.1983 - 06.08.1989
2. யா/ வீரசிங்கம் ம. வித்தியாலயம் : 17.08.1989 - 19.01.1992
3. யா/ பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை : 20.01.1992 - 31.12.1993
4. யா/ வீரசிங்கம் ம. வித்தியாசாலை : 01.01.1994 - 31.12.1994
5. யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை : 01.01.1995 - 10.01.2005
6. யா/ கோண்டாவில் ம. வி. : 11.01.2005 - 17.02.2005
7. யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி : 18.02.2005 - 31.12.2006
8. யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை : 01.01.2007 - 18.01.2007
9. யா/ உரும்பிராய் சைவ தமிழ் வித்தியாலயம் : 19.01.2007 - 28.11.2010
10. யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி : 29.11.2010 - 11.01.2012
11. யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி : 12.01.2012 - 15.01.2022




எமது பாடசாலையில் தரம் 6 / 7க்குரிய பகுதித் தலைவராக கடமையாற்றி 16.01.2022 இன்று ஓய்வு பெற்றதையிட்டு அவரின் சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
ஆசிரிய சகோதரத்துவம் (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) (C-3551)

## பணி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் காணப்படும் பின்வரும் பணி வெற்றிடங்களுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


- பாதுகாப்பு உத்தியோகத்தர்
- பகுதிநேர ஆசிரியர் (கணிதம், ஆங்கிலம் கற்பிக்கக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.)

விண்ணப்பங்களை எதிர்வரும் 31.01.2022 இற்குப் பிந்தாமல் தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (C-3548)

**021 224 0146, 076 828 6331 (Viber,Whatsapp.)**

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 – 11 – 1931



இறப்பு 15 – 01 – 2022

### Dr. கந்தையா சிதம்பரநாதன்

(ஓய்வுநிலை மூத்த வைத்திய அதிகாரி, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் இல. 168, ஆனந்தநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. கந்தையா சிதம்பரநாதன் அவர்கள் நேற்று *(15.01.2022)* சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் தருமபூபதி அவர்களின் (ஓய்வுநிலை விரிவுரையாளர் - ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வாசுகி தியாகராஜா (முன்னாள் ஆசிரியை - யாழ்/ இந்து மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி, மல்லாவி), சி. ஞானகணேசன் (இளங்கோ - லண்டன்), காலஞ்சென்ற கௌசல்யா ரவிசங்கர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் முருகப்பன் தியாகராஜா, அன்னலிங்கம் ரவிசங்கர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தி.சுவர்ணமயூரன், தி.சுகிராஜ், ர.அஞ்சலி (லண்டன்), ர.அஸ்வினி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(16.01.2022)* ஞாயிற்றுக்கிழமை இல. 168, ஆனந்தநகர், கிளிநொச்சியில் உள்ள அன்னாரது இல்லத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெற்று மதியம் 1.00 மணியளவில் அஞ்சலிக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மாலை 4.00 மணியளவில் கிளிநொச்சி ஆனந்தநகர் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 168, ஆனந்தநகர்,
கிளிநொச்சி. (C-3552) தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 06 . 1967



மறைவு 14 . 01 . 2022

### திருமதி சிறீஸ்கந்தராஜா விஜயகுமாரி

கச்சேரி கிழக்கைப் பிறப்பிடமாகவும் அரசவீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சிறீஸ்கந்தராஜா விஜயகுமாரி கடந்த வெள்ளிக்கிழமை *(14.01.2022)* அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் - பரமேஸ்வரி தம்பதியரின் மூத்த மகளும் ஆறுமுகம் - சிவநாயகி தம்பதியரின் மருமகளும் சிறிஸ்கந்தராஜாவின் (முன்னாள் உரிமையாளர் - ஸ்ரீகாந்த் எசன்ஸ்) அன்பு மனைவியும் சஜீவன் (புகுமுக மாணவன் - மொறட்டுவ பல்கலைக்கழகம்), மனோஜன் (A/L 2021 கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுமதியின் அன்புச் சகோதரியும் கேதீஸ்வரநாதன், காலஞ்சென்ற பவானி, நேசரஞ்சினி, சாந்தினி, கோகிலவதி, சறோஜினி, தர்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கதிர்காமத்தம்பி, விக்கினேஸ்வரன், சுந்தரலிங்கம், சிவகுமாரன், சுப்பிரமணியம், ஏகாம்பரநாதன் ஆகியோரின் சகோதரியும் ஹரிகரன், அபிராம் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(16.01.2022)* ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசவீதி,
நல்லூர். **077 634 1283** (C-3554) தகவல்: திரு.சிறீஸ்கந்தராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமெடுக்கும் ஒமிக்ரோன்

# மேலும் 160 பேர் அடையாளம்

(கொழும்பு)

**நாட்டில் 160 புதிய ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு, ஒவ்வாமை மற்றும் மூலக்கூறு பிரிவின் பிரதானி மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.**



இதன்படி, இலங்கையில் ஒமிக்ரோன் தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு, ஒவ்வாமை மற்றும் மூலக்கூறு பிரிவிற்கு கிடைக்கப் பெற்ற 180 மாதிரிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் ஊடாகவே, இந்த 160 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் அடையாளம் காணப்படுகின்ற கொவிட் தொற்றாளர்களில் 12 முதல் 24 வீதமானோர் ஒமிக்ரோன் தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது. (நி)

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காய்நகர்த்தல்கள்

### பரபரப்பாகும் கொழும்பு அரசியல்

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் மாற்றங்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இந்தநிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் நேரடியற்ற அரசியல் நகர்வுகள் தொடர்பிலும் பேச்சுகள் இடம்பெறுகின்றன.

என்றும் இல்லாத வகையில் சந்திரிகாவின் சில நிகழ்வுகளில் ஆளும் மற்றும் அரசாங்கத்தில் முரண்படுவோரைக் காணமுடிகிறது.

அண்மையில் இடம்பெற்ற பண்டாரநாயக்க நினைவு நிகழ்வின்போது அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அநுர பிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த மற்றும் குமார வெல்கம உட்பட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற தரிந்து தொட்டாவத்த எழுதிய 'சந்திரிகா' என்ற சுயசரிதையை வெளியிடும் நிகழ்வின் போது, முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவும் பங்கேற்றார்.

அத்துடன் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றமை, கொழும்பின் அரசியலில் புதிய எண்ணப்பாடுகளை தோற்றுவித்துள்ளதாக மக்கள் மத்தியில் கருத்துக்கள் வெளியாகி வருகின்றன.

இதேவேளை இலங்கையின் அரசியலில் முழுமையான கூட்டணி ஒன்றுக்கான அவசியம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கத்தில் இருந்து பதவி நீக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிட்டுள்ளது. (நி)

# கடந்த வருடம் பாராளுமன்றில் உணவுக்காக ரூ.9 கோடி செலவு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் கடந்த வருடம் உணவுக்காக 9 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத்தில் இடம் பெறும் பல்வேறு குழுக்களின் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வரும் அரச அதிகாரிகளுக்கும் பாராளுமன்றத்தில் உணவு மற்றும் பானங்கள் வழங்கப்படுகின்றன.

அதற்கான செலவீனமும் இந்த 9 கோடி ரூபாவுக்குள் உள்ளடங்குகின்றது என அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரிசி, மரக்கறிகள் உள்ளிட்ட பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்துள்ளதால் பாராளுமன்றத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## அரசிலிருந்து வெளியேறி விமர்சியுங்கள்- பிரதமர்

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதற்கு கதவுகள் திறந்தே இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பது மேல் நோக்கி பார்த்து எச்சில் துப்புவதை போன்றது.

நான் 50 வருடங்களாக அரசியலில் அனுபவங்களைப் பெற்றுள்ளேன். எனினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியல் கொள்கைகளில் இருந்து விலகிச் சென்றதில்லை எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (நி)

## தேங்கிக் கிடக்கும் அத்தியாவசியப் பொருட்கள்



(கொழும்பு)

இரண்டு மாதங்களுக்கும் மேலாக நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய சுமார் 1,700 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியினால், வணிக வங்கிகளுக்கு டொலர்களை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டபோதிலும், இதுவரையில் உரிய தீர்வு கிடைக்கப்பெறவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் அத்தியாவசிய பொருட்களை விடுவிக்க முடியாத காரணத்தினால் நாட்டில் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# மலேரியா பரவலுக்கான வழிகள் யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

## பிரதிப் பணிப்பாளர் யமுனாநந்தா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மலேரியாத் தொற்றுக்கான ஏது நிலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக நான்காவது மலேரியா நோயாளியும் இனம் காணப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என யாழ். போதனா பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி. யமுனாநந்தா தெரிவித்தார். நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

இவ்வாறு அடையாளம் காணப்படும் நோயாளிகள் இளவயதினராக இருப்பதுடன் வேலைவாய்ப்புகளுக்காக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல முயன்று திரும்பி வந்தவர்களாக காணப்படுகின்றனர்.

இவ்வாறு வெளிநாடு சென்று எமது பிரதேசத்திற்கு திரும்பி வரும் போது மலேரியாத் தொற்றுடன் வருகின்றனர்.

எனவே மலேரியா நோய் பரவலைத் தடுப்பதற்கான விழிப்புணர்வை நாம் அதிகரிக்க வேண்டும்.

எமது சுற்றுச்சூழலை நுளம்பு பெருகாது பாதுகாக்க வேண்டும். காய்ச்சல் உடையவர்களுக்கு மலேரியா நோய்க் கிருமிகள் தாக்கியுள்ளதா? என குருதிப்பரிசோதனை செய்தல் அவசியம்.

மேலும் மலேரியா அச்சமுள்ள நாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்பவர்கள் அதற்குரிய தடுப்பு மருந்துகளை சுகாதார மருத்துவ அதிகாரிகளிடம் பெற்றுச் செல்லல் அவசியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

# அதிபர், ஆசிரியர் ஆலோசனை, ஆசிரியர் சேவைகள் மூடப்பட்ட சேவைகளாக பிரகடனம்

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவை, ஆசிரியர் ஆலோசகர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவை ஆகியவற்றை மூன்றும் "மூடப்பட்ட சேவைகளாக" பிரகடனப்படுத்தி கல்வி அமைச்சின் செயலாளர், பேராசிரியர் கபில பெரேராவின் கையொப்பத்துடன் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மூடப்பட்ட சேவை அறிவித்தலானது, கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாகவும் அந்த வர்த்தமானி அறிவித்தலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் உள்ளிட்ட ஏனைய நிறுவன நடவடிக்கை தொடர்பான அதிகாரங்கள் மற்றும் ஏற்பாடுகள், அந்தந்த சேவைகளுக்காக தற்போது நடைமுறையில் உள்ளவாறு தொடர்ந்தும் நடைமுறையாகும்.

குறிப்பிட்ட சேவைகளுக்கான விசேட வேதனமுறைமை தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வினவி, பொருத்தமான வகையில் திருத்தம் மேற்கொள்ள முடியும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## இந்திய மீனவர்கள் விடுதலை தொடர்பாக பசில்- ஜெய்சங்கர் கலந்துரையாடல்

(கொழும்பு)

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆகியோருக்கு இடையில் தொலை காணொளி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் உறுதியான மற்றும் நம்பகமான பங்காளியாக இந்தியா எப்போதும் இருக்கும் என்பதை மீள உறுதிப்படுத்துவதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தமது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிப்பது தொடர்பில் இதன் போது வலியுறுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KILI PEOPLE 10

# உழவர் விழா 2022

KILI PEOPLE VISION ZERO

SUPPORT TO தமிழ் HERITAGE MONTH

16.01.2022 ஞாயிற்றுக்கிழமை

விருது வழங்கும் நிகழ்வு | கலை நிகழ்வுகள்

Zoom @ 13.00 UK | 14.00 EU | 8.00 CA | 18.30 SL



"மண்ணின் மைந்தன் 2020" விருது வழங்கும் நிகழ்வு



உயர்திரு. **நாகலிங்கம் சோதிநாதன்**

முன்னாள் அதிபர்

கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்.

## வாழ்த்துரைகள்

திரு. பொன்னையா விவேகானந்தன் - விரிவுரையாளர் - கனடா

வைத்தியர் மா. குகராசா - கிளிநொச்சி வைத்தியசாலை - கிளிநொச்சி

திருமதி கோ. சுந்தரலிங்கம் - ஓய்வுநிலை உபஅதிபர் - இலண்டன்

திரு. எ. மரியதாஸ் - கல்வியாளர் - அவுஸ்திரேலியா

திரு. அ. கனகரத்தினம் - ஓய்வுநிலை அதிபர் - கிளிநொச்சி

திரு. பாவை ஜெயபாலன் - கவிஞர் - சமூக செயற்பாட்டாளர் - இலண்டன்

Meeting ID :
830 7782 6140
NO PASSWORD

வாழும்போதே வாழ்த்துவோம்!

(C-3556)

info@kilipeople.org | www.kilipeople.org

# சேவைநலன் பாராட்டு



எமது பாடசாலையில் சிறப்புற கடமையாற்றி 16.01.2022 இல் ஓய்வுபெற்றுச் செல்லும்

திருமதி

## சரஸ்வதி ஸ்ரீகாந்தன்

ஆசிரியை அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

சேவைக் காலம் :

கிளி/ சாமிப்புலம் அ.த.க. பாடசாலை
- 28.09.1988 - 03.06.1992
கிளி/ பூநகரி மகா வித்தியாலயம்
- 04.06.1992 - 30.06.1993
கிளி/ பளை மகா வித்தியாலயம்
- 01.07.1993 - 07.05.1996
கிளி/ கரியாலை நாகபடுவான்
இல. - III அ. த. க. பாடசாலை
- 08.05.1996 - 01.05.1997
கிளி/ தர்மக்கேணி அ. த. க. பாடசாலை
- 02.05.1997 - 24.03.1998
கிளி/ பளை றோ. க. த. க. பாடசாலை
- 25.03.1998 - 31.12.2006
கிளி/ ஜெயபுரம் மகா வித்தியாலயம்
- 01.01.2007 - 02.01.2011
யா/ மேலைப்புலோலி சைவப்பிரகாச வி.
- 03.01.2011 - 17.09.2015
யா/ தட்டாதெரு மெ. மி. த. க. பாடசாலை
- 18.09.2015 - 15.01.2022

(C-3557)

வாழ்த்துவோர் : பாடசாலைச் சமூகம்
யா/ தட்டாதெரு மெ. மி. த. க. பாடசாலை



# கண்ணீர் அஞ்சலி

அமரர் **இராசையா அன்னலிங்கம்**

(பிரபல சுருட்டு முதலாளி S.R.A கொக்குவில் மேற்கு)

அன்னலிங்கம் என்னும் நாமம் கொண்டு
அன்னை இல்லமதில் வாழ்ந்தவரே
அன்னையின் இறப்பு நிகழ்தனில்
ஆண்டவன் பொற்பாதம் அடைந்தீரோ
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய மணியர்பதி
முருகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

தோற்றம் 21.03.1944

மறைவு 15.01.2022

கொக்குவில் மேற்கு

வி. ஞானேந்திரன் குடும்பம் (மருமகன்)

(9690)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதந்திகளை நம்பி ஏமாறாமல் பூஸ்டர் தடுப்பூசியை தவறாது பெறுங்கள்



(கொழும்பு)

**மூன்றாவது டோஸ் தடுப்பூசியாக பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்வது மிகவும் முக்கியமானது என்று தேசிய தொற்று நோயியல் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்தார்.**

இதுவரையும் நாம் பெற்றுள்ள கொவிட் தடுப்பூசிகளின் நோய் எதிர்ப்புச் சக்தி படிப்படியாக குறைந்து விடும். எனவே அந்த நோய் எதிர்ப்பு சக்தியை மென்மேலும் அதிகரித்துக் கொள்வதற்காக மூன்றாவது டோஸ் தடுப்பூசியை பெற்றுக் கொள்வது மிக முக்கியம். இதனூடாக ஒமிக்ரோன் தொற்று மற்றும் மரணம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் தடுப்பூசித் திட்டம் மிகவும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

முதலாவது மற்றும் இரண்டாவது டோஸ் தடுப்பூசிகளுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. இதனால் பலருக்கு இரண்டு டோஸ்களும் வழங்கப்பட்டுள்ளன.

கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டதன் பின்னர் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்திருந்த போதிலும், கடந்த இரு வாரங்களாக மீண்டும் கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கையில் சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும், நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் ஒமிக்ரோன் திரிபு பரவியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இது விரைவாக பரவக்கூடியது. இந்நோயினால் ஏற்படும் பாதிப்புகள் குறைவாக இருந்தாலும், இந்நோய் அதிகளவான மக்களுக்கிடையே பரவி வருகின்றது. அதனால் இலங்கை மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. இதனூடாக இந்த நேரத்தில் மற்றொரு அலை உருவாக சாத்தியம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனைத் தடுப்பதற்கு முறையான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது இன்றியமையாதது. கைகளை கழுவுதல், முறையான முகக்கவசம் அணிதல் மற்றும் தேவையில்லாமல் பொது இடங்களுக்குச் செல்வதை தவிர்த்தல் ஆகியன முக்கியமானவை என அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், முதலாவது மற்றும் இரண்டாவது டோஸ் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளும் போது மக்களிடையே காணப்பட்ட ஆர்வம் பூஸ்டர் டோஸைப் பெற்றுக்கொள்வதில் இல்லை.

தடுப்பூசி பெற்றுக் கொள்வதன் மூலம் வெவ்வேறு நோய்கள் உருவாகக் கூடும் என்று இன்று சமூகத்தில் வதந்திகள் பரவுகின்றன. அவற்றை நம்பி ஏமாந்து விடாது பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயமாக பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர் பொதுமக்களை மேலும் வலியுறுத்தியுள்ளார். (நி-5)

# எண்ணெய் தாங்கிகளின் கட்டுப்பாட்டை இழந்து வரும் அரசாங்கம்

## பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாச

(கொழும்பு)

நாட்டின் எண்ணெய் தாங்கிகளின் கட்டுப்பாட்டை அரசாங்கம் இழந்து வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாச இதனை தெரிவித்தார்.

இந்தியாவுடன் இணைந்து எடுக்கப்படும் சில அரசாங்க தீர்மானங்கள் எதிர்காலத்தில் பாதகமாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இன்றைய நிலவரப்படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் குறைந்த எண்ணிக்கையிலான தாங்கிகளே இருக்கின்றன.

அமைச்சரவையிலும், பாராளுமன்றத்திலும் ஆட்சேபனைகள் முன்வைக்கப்படும் அதேவேளையில், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் இணைந்து சுதந்திரக் கட்சியினால் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விமர்சனங்களால் அதிருப்தியடைந்த அரசாங்கம், உறுப்பினர்களை பதவி விலகுமாறு கோருவதாக பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாச தெரிவித்தார். (நி)

# மின்சார சபைக்கு எரிபொருள் வழங்க பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணக்கம்

(கொழும்பு)

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில், இலங்கை மின்சார சபைக்கு ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிபொருளை வழங்குவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணக்கம் வெளியிட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் அன்ட்ரூ நவமணி தகவல் வெளியிட்டார்.

எனினும் எரிபொருள் இருப்பு இதுவரை கிடைக்கப் பெறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

விரைவில் எரிபொருள் இருப்பு கிடைத்தால் மின்சார சபைக்கு தடையில்லா மின்சாரம் வழங்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (நி)

# இராசிபலன்

16.01.2022
தை 03, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 4.07 மணிவரை

திருவாதிரை பின்னிரவு 3.08 மணிவரை
சுபநேரம் -9.34-11.04 மணிவரை
இராகுகாலம் -5.04- 6.34 மணிவரை

சந்திராஷ்டமம்: அனுசம்

வளவன்




சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், வெளியூர்த்தொடர்புகள் அனுகூலம் தரும், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நிதிநிலை உயரும் நாள், வாக்கு மேன்மையுண்டு.




மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.




உறவினர்களும் , நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கனவு பலிதமுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.




சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.




மறைமுக எதிர்ப்புகள் மாறும், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், மாற்றினத்தவர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.





வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.




தொழில் ரீதியாக வர வேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு.

நீ தனியாக இருக்கும் போது தான் பயம் உனக்குள் புகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுப் பிரசித்திபெற்ற பட்டிப் பொங்கல் விழா நேற்றுச் சனிக்கிழமை காலை யாழ்.நகரில் அமைந்துள்ள சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தில் ஆரம்பமாகி இடம்பெற்றது. சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தில் விசேட மேளக்கச்சேரி, பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து கோபூசை வழிபாடுகளும் இடம்பெற்றன. தொடர்ந்து சைவ சமயத்தின் அடையாளமாகக் கருதப்படும் நந்திக் கொடிகள் பறக்க, பசுவதைக்கு எதிராகவும், பசுக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையிலான பதாகைகளையும் ஏந்தி கோபவனி சத்திரத்து ஞான வைரவர் ஆலய முன்றலில் ஆரம்பமாகி மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்.பேருந்து நிலைய மேற்கு வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது. கோபவனியில் யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீனத்தின் முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள், பாராளுமன்ற உறுப்பினரும் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன், யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் தலைவர் சிவஸ்ரீ க.சக்திகிரீவன், பசு பாதுகாப்பு இணையத்தின் அமைப்பாளர் சிவஸ்ரீ ப.சிவலோகநாதன் தேசிகர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள் : ரவிசாந், சிவசாந்தன்)

# நிரந்தர இரத்த சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத்தர கோரிக்கை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு நிரந்தர இரத்த சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தருமாறு மருத்துவ அத்தியட்சகர் திருமதி. டயாழினி மகேந்திரன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு "மூச்சு" செயற்றிட்டம் ஊடாக சிறுநீரக இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்ள எதிர்க்கட்சித் தலைவர் வருகை தந்திருந்த போதே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக மருத்துவமனை அத்தியட்சகர் கருத்துத் தெரிவிக்கையில்,


மருத்துவமனையில் சிறுநீரக நோயாளர்களுக்கான இரத்த சுத்திகரிப்பு நிலையம் தற்போது தற்காலிக இடத்திலேயே இயங்கி வருகிறது. அத்துடன் குறித்த தற்காலிக இடத்தில் தற்போது எம்மிடம் மூன்று சிறுநீரக இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் உள்ளன.

அத்துடன் மூச்சு செயற்றிட்டம் ஊடாக கிடைக்கப்பெறும் இயந்திரத்தை விட மேலும் இரண்டு சிறுநீரக இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் தேவைப்பாடாக உள்ளன எனத் தெரிவித்தார். இது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ பதிலளிக்கையில்,

மருத்துவமனைக்கு தேவையாக உள்ள இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களில் ஒன்றை வெகு விரைவாக வழங்க உறுதி கொள்கிறேன்.

அதேசமயம் இரத்த சுத்திகரிப்பு நிலையத்திற்கான நிரந்தரக் கட்டடம் இந்த மக்களால் நான் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்படும் போது நிச்சயமாக அமைத்துத் தருவேன் என உறுதியளித்தார். (4-5-30)

# காங்கேசன்துறையில் பட்டத் திருவிழா



(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு மாபெரும் பட்டத்திருவிழா காங்கேசன்துறை கடற்கரையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மூன்று தசாப்தகால யுத்தம் நிறைவுபெற்று விடுவிக்கப்பட்ட இப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள இந்நிலையில் முதன்முறையாக பட்டத்திருவிழா இடம்பெற்றுள்ளது.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பட்டத்திருவிழா வல்லை நண்பர்களின் நிதிப்பங்களிப்பில் இடம்பெற்றது. (4-6-33)

# மாநகர சபையின் ஏற்பாட்டில் இன்று முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் முதன் முறையாக முத்தமிழ் விழா இன்று காலை 8.30 மணி முதல் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முத்தமிழ் விழா தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு யாழ்.மாநகர சபையில் இடம்பெற்ற போதே யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலை முதல் இரவு வரை இயற்துறை, இசைத்துறை, நாடகத்துறை என மூன்று அமர்வுகளாக நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது கம்பவாரிதி இ.ஜெயராஜ் குழுவினரின் வழக்காடு மன்றம், பாலமுருகன் மற்றும் குமரனின் நாத சங்கமம், சத்தியவான் சாவித்திரி நாடகம், வீரபாண்டிய கட்டப்பொம்மன் நாடகம் உட்பட பல நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன. (4-18-33)

# நெடுந்தீவு கடற்கரையில் கரையொதுங்கும் மீன்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு கடற்கரையில் அதிகமான மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

நெடுந்தீவு கிழக்கு கடற்கரையில் நேற்று முன்தினம் காலையில் இருந்து இறந்த நிலையில் மீன்கள் கரையொதுங்குவதாக மீனவர்கள் தெரிவித்தனர். இந்த செயற்பாட்டுக்கு இந்திய இழுவைமடி மீன்பிடியினை மேற்கொள்ளும் மீனவர்களே காரணமாக இருக்கக்கூடும் என மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (4-6-33)

## திருட முற்பட்டவர் பிடிபட்டார்

(கரணவாய்)

வடமராட்சி ஜே/350 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு திருட முற்பட்ட ஒருவரை அப்பகுதி இளைஞர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர். குறித்த. நபரின் தேசிய அடையாள அட்டையை பரிசோதித்த போது முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலை சேர்ந்தவர் என தெரிய வந்துள்ளது. குறித்த நபரை நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-60)

# தைப்பூச மஞ்சத்திருவிழா

(குப்பிழான்)

இணுவில் கந்தசுவாமி ஆலய தைப்பூச மஞ்சத்திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் காலை 06 மணியளவில் பால்குடப்பவனி மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி இணுவில் கந்தசுவாமி ஆலயத்தைச் சென்றடையும்.

தொடர்ந்து காலை [illegible] மணியளவில் வருடாந்தப் பொங்கல் ஆரம்பமாகி நடைபெறும்.

பிற்பகல் 05 மணியளவில் வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து ஆறுமுகப்பெருமான் உலகப் பெருமஞ்சத்தில் வீதி [illegible] (4-6-18)



பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (படம் : மகாலிங்கம், சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லியில் 3 கிலோ வெடிகுண்டு மீட்பு

## பாரிய சேதங்கள் தவிர்ப்பு

(டில்லி)

இந்தியத் தலைநகர் டில்லியின் கிழக்கு பகுதியிலுள்ள சந்தையொன்றிலிருந்து 3 கிலோகிராம் நிறையுடைய வெடி குண்டொன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

உச்சபட்ச சேதங்களை ஏற்படுத்தும் நோக்கத்தில் இந்த வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் பரபரப்பாக இயங்கும் மலர்கள் விற்பனை செய்யப்படும் சந்தையில், கைவிடப்பட்ட பையொன்றிலிருந்து இந்த வெடிகுண்டு மீட்கப்பட்டுள்ளது. பின்னர் அதனை பொலிஸார் பாதுகாப்பாக வெடிக்கச் செய்துள்ளனர்.

ஜனவரி 26 ஆம் திகதி குடியரசு தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில், அதனை முன்னிட்டு மேற்கொள்ளப்படவிருந்த தீவிரவாத தாக்குதலாக இது இருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மலர்கள் வாங்குவது போல, குறித்த சந்தைக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற நபரொருவர், வெடிகுண்டு பையுடன் மோட்டார் சைக்கிளையும் கைவிட்டுச் சென்றுள்ளார். இதனால் சந்தேகம் கொண்ட பூ வியாபாரி ஒருவர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதன் அடிப்படையில், குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இதனால் பாரிய வெடிவிபத்தும் சேதங்களும் தவிர்க்கப்பட்டுள்ளன. (நி)

# பனிமழையில் பொங்கல் பொங்கிய இராணுவ வீரர்கள்




(டில்லி)

தமிழர்களின் பாரம்பரியத்தை பறைசாற்றும் பொங்கல் பண்டிகை நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, பொது மக்கள் அதிகாலையிலேயே வீடுகளில் கோலம் வரைந்து, வர்ணம் பூசப்பட்ட புதுப்பானையில், புத்தரசியிட்டு, பொங்கலிட்டு இறைவனை வழிபட்டனர். மஞ்சள், இஞ்சி, கரும்பு, காய்கறிகள் ஆகியவற்றை சூரிய பகவானுக்கு படைத்தனர்.

இந்நிலையில் இந்திய இராணுவ வீரர்கள் கார்கில் பகுதியில் பனிமழை நடுவே பொங்கல் கொண்டாடும் வீடியோ தற்போது வெளியாகி உள்ளது. இந்திய எல்லையான லடாக்கின் கார்கில் பகுதியில் உள்ள பனிமழையில் இராணுவ வீரர்கள் பொங்கல் பானை வைத்து, தேங்காய், பழம் உள்ளிட்டவை கொண்டு பாரம்பரிய முறைப்படி பொங்கல் கொண்டாடி உள்ளனர். மேலும் அங்கிருக்கும் இராணுவ வீரர்கள் பொங்கல் வாழ்த்துகள் கூறுவதும் அந்த வீடியோவில் பதிவாகி உள்ளது. (நி)

# ஐயப்ப பக்தர்கள் பயணித்த பேருந்து கவிழ்ந்து விபத்து



## 10 பேர் படுகாயம்

(சென்னை)

சபரிமலை ஐயப்பன் கோவிலில், மகரவிளக்கு தரிசனம் செய்ய சபரிமலை சென்று திரும்பிக்கொண்டிருந்த, ஈரோட்டைச் சேர்ந்த ஐயப்ப பக்தர்களின் மினி பேருந்து கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சபரிமலையில் உள்ள பொன்னம்பல மேட்டில் மகரஜோதி தரிசனத்தை இலட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

இந்நிலையில் மகரவிளக்கு தரிசனம் செய்து திரும்பிய போது மினி பேருந்து கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது.

நேற்று அதிகாலையில் ஏற்பட்ட இந்த விபத்தில், 10 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். (நி)



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அருகே சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி மதுபானப் போத்தல்களுடன் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதனை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட பொது மக்கள் பீர்போத்தல்களை அள்ளிச் சென்றனர்.


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம் 1<br>கி.பா: சூரி.செவ் 8இல்<br>உயரம்: 177 cm<br>தகைமை/தொழில்: CIMA,BBM கணக்காளர்<br>எதிர்பார்ப்பு:படித்தபெண்<br>தொ.இ: B/6562 | பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா:12 சூரி 4 செவ் 11இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ உதவியாளர் B.Sc<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி நிரந்தரதொழில் அல்லது வெளிநாடு (கனடா, லண்டன், அவுஸ்திரேலியா)<br>தொ.இ:G/6362 |
| பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா:64 சூரி 1 செவ் 6இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: M.Sc, AAT,ACCA/ கணக்காளர் லண்டன்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி. தீவு பகுதி வேண்டாம் இந்தியாவுக்கு வந்து திருமணம் செய்யலாம்<br>தொ.இ: B/6571 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம் 2<br>கி.பா:-சூரி 7 செவ் 8இல் உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:O/L தையல்<br>எதிர்பார்ப்பு:சுயதொழில்<br>தொ.இ:G/6368 |
| பிறப்பு:1984 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா:-32 செவ் 6 சூரி 3இல்<br>உயரம்:165cm<br>தகைமை/தொழில்:HNDA அரசதொழில்<br>தொ.இ: B/6623 | பிறப்பு:1984 இந்து நட்சத்திரம்:பூரட்டாதி 2<br>கி.பா:32 ¼ சூரி 11 செவ் 1 இல்<br>உயரம்:155 cm<br>தகைமை/தொழில்:B.Sc சுகாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச.தனியார் உத்தியோகம் வெளிநாடு (லண்டன்)<br>தொ.இ:G/6373 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: சூரி 9 செவ் 6இல்<br>தகைமை/தொழில்:QS லண்டன் PR<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. இந்தியா வந்து திருமணம் செய்யலாம்.<br>தொ.இ: B/6602 | பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்:ரோகிணி 4<br>கி.பா: 11¼ சூரி 9 செவ் 8இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:MBBS டொக்டர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும் 3 மாதத்தில் விவாகரத்து பெற்றவர்.<br>தொ.இ:G/6396 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்

# ஜெயக்குமார் திருமணசேவை

1991 சூரியன், செவ்வாய் பெண் (லண்டன்). இவருக்கு டிகிரி முடித்த மணமகன் தேவை.
1990 (லண்டன்), 1995 (கனடா), 1990 (கனடா) இல் உள்ள மணமகள்களுக்கு படித்த மணமகன்கள் தேவை. மற்றும் ஊரில் உள்ள மணமகள்களுக்கு ஊரில் உள்ள மணமகன்கள் தேவை.

T.P: 077 6366397 (Srilanka )
Viber: 0094762049298
Whats App: 004917643399372 (9675)

# புதிய மாணவர் அனுமதி-2022

வடக்கு மாகாணம் , யாழ்ப்பாணம், சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் கண்பார்வையற்ற அல்லது குறைந்த பார்வையுடைய பிள்ளைகளை 2022 ஆம் கல்வியாண்டில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பிள்ளைகளுக்கான உணவு, உடை, தங்குமிடம் மற்றும் கல்விக்கான அனைத்து வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும். மேலும், மேலதிக வகுப்புக்கள், கணனிக்கற்கைகள், கவின்கலை வகுப்புக்கள், ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகள், சுகாதார, மருத்துவ வசதிகள் விளையாட்டு வசதிகள் என்பனவும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டவாறான நிலைமைகளையுடைய பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் 15.02.2022 க்குப் பிந்தாமல் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்துக்கு வழிசமைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**குறிப்பு : விடுதியில் தங்கியிருக்கும் பிள்ளைகளைப் பெற்றோர்கள் சந்திப்பதற்கோ அல்லது விடுமுறை நாட்களில் வீடு சென்று வருவதற்கோ அனுமதி வழங்கப்படும்.**

தொடர்பு :
தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

தொலைபேசி : 021 224 0146,
076 8286331 (WhatsApp, Viber)
(C-3549)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு உதவ எப்போதும் சீனா தயார்

## சீன வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

சீனாவிடமிருந்து புதிதாக மற்றுமொரு கடனைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுவரும் நிலையில், அவசியமான உதவிகளை வழங்க சீனா எப்போதும் தயார் என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

பீஜிங்கில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் கருத்து தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே சீன வெளிவிவகார அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரம், சமூக அபிவிருத்தி என்பவற்றுக்கு அவசியமான உதவிகளை சீனா எப்போதும் வழங்கியது என சுட்டிக்காட்டிய அவர் எதிர்காலத்திலும் இந்த நடவடிக்கை தொடரும் என உறுதியளித்தார்.

சீனாவிடமிருந்து புதிதாகக் கடன்களைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் ஓரளவிற்கு முன்னேற்றகரமான நிலையில் இருப்பதாகவும் இறுதிக்கட்ட முடிவுகள் எடுக்கப்பட்டவுடன் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# நாட்டை மீட்க படையணி; நிறுவியது சஜித் அணி

(கொழும்பு)

அண்மைய காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருக்கின்ற எமது நாட்டை மீட்டெடுப்பதற்கான சக்தி இளைஞர்களிடம் மாத்திரமே காணப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்காக இளைஞர்களை ஒன்றுதிரட்டிக்கொள்ளும் நோக்கில் தமது கட்சியின் ஊடாக ஐக்கிய ஒற்றுமைப் படையணியை நிறுவியிருப்பதாகத் தெரிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினால் நிறுவப்பட்டுள்ள ஐக்கிய ஒற்றுமைப் படையணியின் அலுவலகத்தை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைத்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, அதனைத் தொடர்ந்து எதுல்கோட்டையில் அமைந்துள்ள கட்சித்தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

கொரோனா வைரஸ்பரவல் காரணமாகவும் தற்போதைய அரசாங்கத்தின் செயற்றிறனற்ற நிர்வாகத்தினாலும் இப்போது எமது நாடு பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருக்கின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்டெடுத்து, அதனை மீளக்கட்டியெழுப்புவதற்கான இயலுமை இளைஞர்களிடம் மாத்திரமே காணப்படுகின்றது.

எனவே நாட்டின் மீட்சியை இலக்காகக்கொண்டு இளைஞர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டும் நோக்கில் எமது கட்சியின் ஊடாக ஐக்கிய ஒற்றுமைப்படையணி என்ற கட்டமைப்பை நிறுவியிருக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி)

## தேவாலயத்தில் கைக்குண்டு மீட்பு

# அரசாங்கத்தின் முன்னேற்றத்தை சீர்குலைக்கும் முயற்சியே

## என்கிறார் சரத் வீரசேகர



(கொழும்பு)

பொரளையில் உள்ள தேவாலயத்தில் அண்மையில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் பெரிய சூத்திரதாரி இருப்பதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தேசிய பாதுகாப்பை உறுதி செய்தல் உள்ளிட்ட அரசாங்கத்தின் முன்னேற்றத்தை சீர்குலைக்கும் முயற்சியாக இருக்கலாம் என அமைச்சர் சுட்டிக்காட்டினார். தற்போது இரண்டு நாட்களே சென்றுள்ள நிலையில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பிரதான சந்தேக நபரைக் கைது செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பொலிஸாரின் மீதான நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையில் அறிக்கைகள் வெளியிடுவதானது பெரும் பிரச்சினைக்கு வழிவகுக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (நி)

# சீமெந்து தட்டுப்பாட்டிற்கு விரைவில் தீர்வு

(கொழும்பு)

நாளை மறுதினம் இரண்டு இலட்சம் சீமெந்து பொதிகளைத் தாங்கிய கப்பல் ஒன்று நாட்டுக்கு வரவுள்ளது.

எனவே, எதிர்வரும் 22 ஆம் திகதியின் பின்னர் சீமெந்து தட்டுப்பாடு குறைவடையும் என சீமெந்து இறக்குமதியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும் தெரிவிக்கின்றனர். (நி)

# பணமோசடியில் ஈடுபட்ட சகோதரிகள் வசமாக சிக்கினர்

(கண்டி)

புதுப்பிக்கப்படாத வெளிநாட்டு வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்கான உரிமத்தை பயன்படுத்தி சட்ட விரோதமாக கண்டியில் வேலைவாய்ப்பு நிறுவனமொன்றை நடத்தி, அதன் மூலம் பல பெண்களிடம் 24 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் பண மோசடி செய்த சகோதரிகள் இருவரை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் இருவரும் மாத்தளை நீதவான் நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டதையடுத்து, அவர்களால் மோசடி செய்யப்பட்ட பணத்தை மீள ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனையடுத்து இருவரும் தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 420 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 600 |
| தக்காளி | 180 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 |
| கோவா | 260 | 320 | 300 |
| கரட் | 440 | 480 | 500 |
| பூசணி | 100 | 60 | 120 |
| புடோல் | 200 | 240 | 250 |
| வாழைக்காய் | 70 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 160 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 240 |
| பாகற்காய் | 280 | 300 | 500 |
| வெண்டிக்காய் | 240 | 150 | 280 |
| கருணைக் கிழங்கு | 120 | 90 | 120 |
| பயற்றங்காய் | 500 | 350 | 400 |
| லீக்ஸ் | 260 | 300 | 300 |
| பீற்றூட் | 300 | -- | 450 |
| கறிமிளகாய் | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 |
| போஞ்சி | 350 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | -- | 360 |
| கீரை - 1 பிடி | 60 | 150 | 100 |
| தேசிக்காய் | 150 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 350 | 450 | 600 |
| முள்ளங்கி | 80 | 250 | 120 |
| பொன்னாங்காணி | 70 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 100 | -- | 120 |

# மலையகத்தில் களைகட்டிய பட்டிப் பொங்கல் நிகழ்வு



(ஹற்றன்)

உழவர் திருநாளை முன்னிட்டு நேற்று மலையகத்தில் பட்டிப் பொங்கல் மிகவும் சிறப்பாக கால்நடை வளர்ப்பாளர்களால் கொண்டாடப்பட்டது.

அந்தவகையில் கொட்டகலை ரொசிட்டா தேசிய பண்ணை வளாகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் பட்டிப் பொங்கல் சிறப்பாக நடைபெற்றது.

இதில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, கண்டி இந்திய உதவி தூதுவர் ஆதிரா, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ரமேஷ்வரன், இ.தொ.காவின் உப தலைவரும், பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் ஆகியோருடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நீங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு எதை விதைத்தீர்களோ அதைத்தான் அறுவடை செய்கிறீர்கள். - பார்பர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ரணில் வெளிப்படுத்திய துரோணாச்சாரியப் பகைமை

மகாபாரதப் போர் மூழ்வதற்கு மூல காரணம் துரோணாச்சாரியூர் என்பதுதான் நம் கருத்து. துரோணரும் பாஞ்சாலியின் தந்தை துருபதனும் (பாஞ்சாலன்) குருகுலத்தில் ஒன்றாகப் படித்த மாணவர்கள்.

மிகவும் நட்போடு இருந்தவர்கள். உனக்கேதும் கஷ்டம் ஏற்படின் என்னிடம் வா என்று துரோணருக்குக் கூறி வைத்தவன் துருபதன்.

மாணவப் பருவம் முடிவுற்றுப்போக, துரோணர் வில்வித்தை கற்பிக்கும் ஆசிரியத்துவத்தை மேற்கொள்ள, பாஞ்சாலனோ மன்னர் முடி தரித்தான்.

வில்வித்தை போதிக்கும் துரோணரை வறுமை வாட்டியது. பிள்ளைக்குப் பால் கொடுப்பதற்கே இடர்ப்பட்டார்.

அப்போது தன் சக மாணவன் பாஞ்சாலனின் ஞாபகம் துரோணருக்கு வருகிறது.

பாஞ்சாலனிடம் சென்ற துரோணர்; தன் வறுமையை எடுத்துக்கூறி உதவி கோரினார்.

எனினும் பாஞ்சால மன்னன் கர்வம் மிக்கவனாக இருந்தான். தன் பள்ளித் தோழன் என்றும் பாராமல் துரோணரை அவமதிப்புச் செய்தான்.

என் பிள்ளைக்குப் பால் கொடுக்க ஒரு பசுவையேனும் தந்துதவுக! என்று கெஞ்சினார் துரோணர்.

அதற்கும் பாஞ்சாலன் இரங்கினன்னல்லன்.

கடுங்கோபமுற்ற துரோணர்; பாஞ்சாலனைத் தண்டிக்க வேண்டும் எனத் தன்னுள் சபதமிட்டார். காலமும் நேரமும் கைகூடியது. தன்னிடம் வில்வித்தை பயின்ற அருச்சுனனிடம் குருதட்சணை கேட்கிறார் துரோணர்.

பாஞ்சால மன்னனை மண்டியிட வைத்து, அவனைக் கட்டி இழுத்து வரவேண்டும் என்பது துரோணர் கேட்ட குருதட்சணையாக இருந்தது.

அதனை மறுக்காத அருச்சுனன் பாஞ்சாலனுடன் போர் தொடுத்து அவனைச் சிறைப் படுத்தி கட்டி இழுத்துவந்து துரோணர் முன் நிறுத்தினான்.

துரோணர் தன் பகையைத் தீர்க்க அவனை அவமானப்படுத்தி, அனுப்பி வைத்தார்.

மீண்டு சென்ற பாஞ்சாலன் துரோணரைக் கொல்ல ஒரு மகனையும் அருச்சுனனை மணம்புரிய ஒரு மகளையும் பெற்றெடுக்க வேண்டிக் கடும்தவம் புரிந்தான்.

அதன் பயனாக திருஷ்டதுய்மனையும் திரௌபதியையும் பாஞ்சாலன் பெற்றெடுத்தான்.

ஈற்றில் திருஷ்டதுய்மனே துரோணரை வதம் செய்தான் என்பதும் பாண்டவர் மனைவியாக திரௌபதி அமைந்ததும் அறியப்பட்ட இதிகாசம்.

இப்போது முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கம் வாருங்கள்.

தன்னை ஜனாதிபதி ஆகாமல் செய்தவர் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் எனமிகப் பெரிய குற்றச்சாட்டை அவர் சுமத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியுடன் ஆட்சியமைத்து, பிரதமராக இருந்துவிட்டு; தமிழ் மக்களுக்கு உரிமை தருவேன் என்பது போல நடித்து, தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்ற ரணில் விக்கிரமசிங்க இப்போது பிரபாகரன் மீது குற்றம் சுமத்துகிறார் என்றால்,

இதுகாறும் ரணில் விக்கிரமசிங்கவின் மனநிலை எப்படி இருந்துள்ளதென்பது தெரிகிறதல்லவா?

இதற்கு மேலாக, விடுதலைப் புலிகளை வேரறுக்கும் நரிவேலையையும் அவரே செய்தார் எனும்போது ரணிலிடம் இருந்த துரோணாச்சாரியப் பகைமை இப்போது வெளிப்பட்டுள்ளதென்று கூறுவது பொருத்தமே.

# அரசியல்வாதிகளும் அரச உத்தியோகத்தர்களும் நாட்டுக்கு சுமை என மக்கள் நினைக்கின்றனர்

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

அரசியல்வாதிகளும் அரச உத்தியோகத்தர்களும் நாட்டிற்குச் சுமை என மக்கள் மத்தியில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட திஹாகொட பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கண்ணோட்டத்தை மாற்றுவதற்கு அனைத்து அரச ஊழியர்களும் அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும் அரச உத்தியோகத்தர்கள் நேர்மையாகவும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். (ம)

# பொருளாதார தடை தமிழர்களுக்கு புதிதல்ல சிங்களவர்கள் தற்போதே உணர்கிறார்கள்

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

பொருளாதார தடை என்பது தமிழர்களுக்கு புதிதான ஒரு விடயம் இல்லை. அந்த பொருளாதார தடையை தற்போது தான் சிங்களவர்கள் உணர்கிறார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் நிகழ்வும் பாரம்பரிய தமிழர் விளையாட்டு நிகழ்வும் நேற்று உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. குறித்த நிகழ்வினை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலையே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் விவசாயிகள் நெல் அறுவடை செய்கின்ற காலத்தில் இந்த அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து அரிசியினை இறக்குமதி செய்வது மேலும் எமது மக்களைத் துன்பத்துக்கு உள்ளாகும்.

ஆனால் நாம் கடும் நெருக்கடியோடு வாழ்ந்தவர்கள். ஒரு கால கட்டத்தில் (90களில்) இலங்கையில் மண்ணெண்ணெய் 12 ரூபாய்க்கு விற்றபோது நாம் 300 ரூபாய்க்கு வாங்கியவர்கள். அப்போது யூரியாவை கண்ணால் காணவில்லை. உடுப்பு துவைப்பதற்கு சவர்க்காரங்களைக் காணவில்லை. நாங்கள் இந்த மண்ணிலே பெட்ரோலை கண்டிருந்ததில்லை. சீமெந்துகளை, கம்பிகளை கண்டிருந்ததில்லை.

அவ்வாறு இருந்தும் இந்த மண்ணிலே நாங்கள் வாழ்ந்து இருந்தோம். எங்களுடைய வாழ்க்கை நகர்ந்திருந்தது. அதனை இப்போது தான் சிங்கள மக்கள் படிக்கவும் உணரவும் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே பொருளாதார தடை என்பதும் பொருளாதாரத்தின் மீதான ஒரு வகையான ஆக்கிரமிப்பு என்பதும் இப்போதுதான் சிங்கள மக்களை உணர வைத்திருக்கிறது. தமிழர்கள் ஏற்கனவே இவற்றை நேரடியாக அனுபவித்து வாழ்ந்தவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கந்தையா உபாத்தியாயர் சந்தி, கொத்தியாவத்தை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# புலமைப்பரிசில் பரீட்சை


## மேலதிக வகுப்புகளுக்கு 18 ஆம் திகதி முதல் தடை

(கொழும்பு)

ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை குறித்த மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்த எதிர்வரும் 18ஆம் திகதி நள்ளிரவு முதல் தடை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது. அத்துடன், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை குறித்த மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தவும் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி நள்ளிரவு முதல் தடை விதிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ நான் சொல்வதை நம்புங்கள் என் வார்த்தையின் பொருட்டு நம்பாவிட்டால் என் செயல்களின் பொருட்டாவது நம்புங்கள். நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார் ஏன், அவற்றைவிடப் பெரியவற்றையும் செய்வார். ஏனெனில், நான் தந்தையிடம் போகிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன். இவ்வாறு தந்தை மகன் வழியாய் மாட்சி பெறுவார். நீங்கள் என் பெயரால் எதை கேட்டாலும் செய்வேன். நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்.

❖ "உங்களோடு என்றும் இருக்கும் படி மற்றொரு துணையாளரை உங்களுக்கத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். உலகம் அவரை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில், அது அவரைக் காண்பதுமில்லை, அறிவதுமில்லை. நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்கள். ஏனெனில், அவர் உங்களோடு தங்கியிருக்கிறார் உங்களுக்குள்ளும் இருக்கிறார். நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன். உங்களிடம் திரும்பி வருவேன். இன்னும் சிறிது காலத்தில் உலகம் என்னைக் காணாது. ஆனால், நீங்கள் என்னைக் காண்பீர்கள். ஏனெனில், நான் வாழ்கிறேன் நீங்களும் வாழ்வீர்கள்.

❖ நானே திராட்சைச் செடி. நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் [illegible] தருவார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நியமனம்



(தருமபுரம்)
கிளிநொச்சி மாவட்ட தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக டீ.எம்.ஏ.சதுரங்க மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். (4-6-316)

# பொங்கல் தினத்தில் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் பதிவு

(நெளுக்குளம்)

**தைப்பொங்கல் தினமான நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்டத்தில் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியதுடன் பலர் காயமடைந்து மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டனர்.**

வவுனியாவில் தைப்பொங்கல் தினத்தில் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 12 ஆண்கள் மற்றும் 03 பெண்கள் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை 4 மணி தொடக்கம் இரவு 12 மணி வரையான காலப் பகுதியிலேயே குறித்த வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றன.

குறித்த சம்பவங்கள் வவுனியா பூந்தோட்டம், புளியங்குளம், ஈச்சங்குளம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பான விசாரணையினை வவுனியா, ஈச்சங்குளம், புளியங்குளம் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)

## மணல் ஏலவிற்பனை



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட மணல் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# 250 கிலோ கேரள கஞ்சாவுடன் யாழ்.வாசி வவுனியாவில் கைது



(நெளுக்குளம்)
வவுனியா ஈரட்டை பகுதியில் 250 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவரை நேற்று இராணுவத்தினர் கைது செய்தனர்.


வன்னி இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு நோக்கி பயணித்த கூலர் ரக வாகனம் ஒன்றை இராணுவத்தினர் சோதனையிட்ட போதே கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா ஈரட்டை பெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் யாழ்ப்பாணம் கீரிமலை பகுதியைச் சேர்ந்தவர் எனவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவையும் வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக இராணுவப் புலனாய்வு அதிகாரிகள், ஈரட்டை பெரியகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-299-250)

# இரண்டு வருடங்களாக இடம்பெற்ற கடத்தல் சம்பவம் முறியடிப்பு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு உடையார்கட்டுப் பகுதியிலிருந்து சல்லிக்கல்லு ஏற்றும் கனரக வாகனத்தில் பாலை மரக்குற்றிகளைக் கடத்திச் செல்ல முற்பட்டவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.



நேற்று முன்தினம் காலை உடையார்கட்டு தெற்கு பகுதியில், சுமார் 5 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான அறுத்த பாலை மரக்குற்றிகளை கனரக வாகனத்தில் ஏற்றி அதன் மேல் சல்லிக்கல்லுகள் ஏற்றப்பட்டுக் கடத்தப்படுவதாகப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தகவல் கிடைக்கப்பெற்றது.

குறித்த தகவலுக்கு அமையப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையக்குழு ஒன்று சென்று குறித்த கனரக வாகனத்தை மடக்கிப் பிடித்துள்ளதுடன், சாரதியைக் கைது செய்தனர்.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இவ்வாறான கடத்தல் சம்பவம் இடம்பெற்று வருவதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

விசுவமடு பகுதியினை சேர்ந்த கனரக வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், கனரக வாகனம் மரக்குற்றிகள், சல்லிக்கல்லுகளும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பில் வழக்குப் பதிவு செய்த புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கையும் எடுத்தனர். (4-6)

## அங்குரார்ப்பண நிகழ்வு

(கரணவாய்)
பாடசாலை மட்ட போசாக்கு வலுவூட்டத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நாளை மறுதினம் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யா/விக்னேஸ்வரக் கல்லூரியில் கல்லூரி அதிபர் பொ.அரவிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன கலந்து கொள்ளவுள்ளார். (4-6-60)

## நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும்

இருபாலை வேளா தோப்பு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் நடைபெறும் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (4-6)

# செலவிடப்படும் நிதியில் வெளிப்படைத் தன்மை பேணுங்கள்

## அமைச்சர் டக்ளஸ் பணிப்பு

(கண்டாவளை)
கிளிநொச்சி மாவட்டத்துக்கு 2022 வரவு-செலவுத் திட்ட நிதியில் ஒதுக்கப்பட்டுள்ள 545 மில்லியன் ரூபாய் பணத்தை வெளிப்படைத்தன்மையுடன், மக்கள் நலன் சார்ந்து செலவிடுமாறு அமைச்சர் டக்ளஸ் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கீட்டின்படி, கிராமத்துடனான உரையாடல் திட்டத்தின் கீழ் கிளிநொச்சியின் 95 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் தலா 3 மில்லியன் படி 285 மில்லியன் ரூபாவும், இணைத்தலைவரின் ஒதுக்கீடாக 100 மில்லியன் ரூபாவும், 40 வட்டாரங்களுக்கும் தலா 4 மில்லியன்படி 160 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 545 மில்லியன் ரூபாய் கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை வெளிப்படைத்தன்மையுடன், மக்களுடைய நலன்களை நிறை செய்யக் கூடிய வகையில் நன்கு திட்டமிட்டுச் செலவிடுமாறு கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளைப் பணித்தார். (4-6-315)




அதிகார துஷ்பிரயோகத்தினால் ஏற்படும் பாதிப்புக்களை வெளிக்கொணரும் முகமாக மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயம் நிறுவனத்தின் தயாரிப்பில் சர்வமத பிரிவுகளோடு இயக்குநர் டிலைக்ஸனின் இயக்கத்தில் உருவாக்கப்பட்ட "கல்லிலே ஈரம்" விழிப்புணர்வு குறுந்திரைப்படம் வைபவ ரீதியாக வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

(படம்:-ஜோசப் நயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 பேர்...

பதிவாகியுள்ளது.

அதன்படி, இலங்கையில் இதுவரை பதிவான மொத்த கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 15,197 ஆக உயர்ந்துள்ளது. (ம)

## லொக்டவுண்...

பிரகடனப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொரோனா வைரஸால் நாட்டுக்கு இவ்வாறான பாதிப்புகள் ஏற்படும் என்பதைத் தாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை. இந்த வைரஸ் பெருந்தொற்றுக்கு மத்தியில், லொக்டவுண் என்ற சொல்லைத் தடை செய்யப்பட்ட சொல்லாக்குவதற்குத்தான் சுகாதார அமைச்சர் என்ற விதத்தில் தீர்மானித்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டை முடக்குமாறு அனைவரும் கூறுவதானது, மிகவும் இலகுவான விடயம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடு முடக்கப்பட்ட போதிலும், அரச ஊழியர்களின் சம்பளத்தை ஒரு ரூபாயினாலேனும் குறைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (ம)

## 4 ஆவது தடுப்...

வெல தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசியின் நான்காவது டோஸ் தேவைப்பட்டால், அது இந்த நாட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தடுப்பூசி வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை கொள்வனவு செய்யப்பட்ட டோஸ்களுக்காக சுமார் 35 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)

## இலங்கையின்...

அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆகியோருக்கு இடையில் தொலை காணொளி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் தமது உத்தியோகபூர்வ ட்விட்டர் பக்கத்தில் இதனை பதிவிட்டுள்ளார்.

இலங்கையின் உறுதியான மற்றும் நம்பகமான பங்காளியாக இந்தியா எப்போதும் இருக்கும் என்பதை மீள உறுதிப்படுத்துவதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தமது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த முக்கியமான தருணத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்காக ஏனைய உலக நாடுகளின் முயற்சிகளுடன் இணைந்து செயற்படுவதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். (ம)

*(மேலும் ஒரு செய்தி உள்ளே)*

## தமிழர்களின்...

இந்திய அரசின் நிதி உதவியின் ஊடாக இலங்கையில் மலையக பகுதிகளில் அமைக்கப்பட்ட இந்திய வீடமைப்பு வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை பூரணப்படுத்தி அதனை பயனாளிகளுக்கு கையளிப்பதற்கான திறப்பு வழங்கும் வைபவம் நேற்று கொட்டகலை சீ.எல்.எப் வளாகத்தில் இலங்கை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையிலும், இந்தியாவிலும் மாடுகள் தெய்வங்களாக பார்க்கப்படுகின்றன. பொங்கல் என்பது சூரியனுக்கு நன்றி செலுத்துவதாகும். காரணம் சூரியனே எமது வாழ்க்கைக்கு உதவியளிக்கின்றது.

அதற்கும் மேலதிகமாக திருவள்ளுவர் நாளும் இன்றாகும். வள்ளுவர் பெருமான் உலகுக்கு நல்ல பல நெறிகளை தந்துள்ளார் என்பதை மறக்க கூடாது என்றார். (ம)

## முழு அர்ப்பணிப்...

கொள்கைகளில் மாற்றம் ஏற்படாதவாறு நாட்டை வலுப்படுத்த வேண்டும்.

அவ்வாறானதொரு நிலையான கொள்கை இல்லாவிடின் ஒருபோதும் மீட்டெடுக்க இயலாது.

இவ்வருடத்தில் முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நாட்டையும் மக்களையும் பாதுகாக்க உறுதி கொள்வோம் என்றார். (ம)

## தேர்தல்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மீரிகம முதல் குருநாகல் வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டத்தின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற மக்கள் தன்மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தவறான விமர்சனங்களை முன்வைத்து மக்களை ஏமாற்ற முயற்சிக்க வேண்டாம் எனவும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

கோவிட் பரவல் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பெரிதளவில் பாதிக்கப் பட்டதாகவும், சுற்றுலாப் பயணிகளின் வருகை அதி கரித்தால் நாட்டின் பொருளாதாரத்தை மீள சரிசெய்ய முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் உள்ள விவசாயிகளை தான் எப்போதும் மறவேன் என உறுதியளித்த ஜனாதிபதி, பயிர்ச்செய்கை முறையில் விரைவில் புதிய மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டார். (ம)

## சுற்றுலாவுக்கு...

யின் தலைமை அதிகாரி கிமாலி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கோவிட் நிலைமை காரணமாக மூடப்பட்டிருந்த நாடு முழுமையாக திறக்கப்பட்டதன் பின்பு மூன்று மாதங்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்த நிலையில் காணப்படுவதாகவும் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது கடந்த 11 நாட்களில் மொத்தமாக 31,688 சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 22,771 காணப்பட்டதோடு நவம்பர் மாதம் 44,294 எண்ணிக்கையினரும் டிசம்பர் மாதம் அதன் எண்ணிக்கை 31,688 பதிவாகியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)


## தவறிவிட்டது

யாழ். நகரில் இருந்து மன்னார் சென்ற பேருந்து ஒன்றில் பெண் ஒருவரின் நகைப்பை தவறிவிட்டது.
குறித்த பெண் 15.01.2022 நேற்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். நகரில் இருந்து தனியார் பேருந்தில் பயணித்தது குறிப்பிடத்தக்கது.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 593 0940
077 588 2240

(9692)

## வேலை வாய்ப்பு

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள தனியார் வைத்திய நிலையம் ஒன்றின் (medical clinic) இற்கு வேலை செய்வதற்கு தகுதியுள்ள பெண் பிள்ளைகள் தேவை.

077 476 6303
075 350 3280

(9691)



ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 15/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1198
வெற்றி இலக்கங்கள்
மகரம் 0 0 9 6 7 7

மெகா பவர்
திகதி 15/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 0996
F 17 26 29 36 69

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2022/01/15
சீட்டிழுப்பு இலக்கம் 1668
சுப்பர் இலக்கம் 09
வெற்றி இலக்கங்கள் 39 46 55 56

மஹஜன சம்பத
திகதி 2022/01/15
சீட்டிழுப்பு இலக்கம் 4648
P 8 6 1 9 4 1

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 15.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2943
வெற்றி இலக்கங்கள்
O 21 39 45 72

தன நிதானய
திகதி -2022.01.15
சீட்டிழுப்பு இலக்கம் -678
K 21 75 79 81

அத கோடிபதி
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1451
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 15.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,036,080
வெற்றி இலக்கங்கள் 18 60 61 77 W

சனிதா
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3786
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 15.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,704,680
வெற்றி இலக்கங்கள் 08 43 64 75 R

12 வசனா
சீட்டிழுப்பு வாரம் 801
வர்ணம் சிவப்பு
திகதி 2022.01.15 சனிக்கிழமை
M 22 08 37 49 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 204,354,583/-
தொலைபேசி: 011-2 333 546-47

சம்வர்தன வாசனாவ
திகதி: 2022-01-15
வெற்றி வாரம்: 477 | வர்ணம்: சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 12,639,524/-
R 56 41 53 1
ரூ. 2,600,340/-
ரூ. 12,742,524/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1625
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 15.01.2022
தினம் சனிக்கிழமை
F 03 24 25 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் 54,673,120/=

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,040,510/=
திகதி 15.01.2022
வெற்றி வாரம் 3337
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 34 35 36 62 சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,457,410/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுவலகம் ஒன்றுக்கு இடம் தேவை
## Office Space Wanted

Square Feet : 1,500 To 3,000
Location : யாழ்ப்பாண Town அல்லது KKS Road, (Jaffna to Kokkuvil)

Consulting & Training பாவனைக்கான office இற்கு இடம் தேவை.

Broker or owner அழைக்க வேண்டிய தொடர்பு எண் (C-3555)

**076 044 4311**

## காணி தேவை

ஒருங்கிணைந்த பண்ணை செய்வதற்கு 10 ஏக்கருக்கு மேல் தோட்டக்காணி விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. தேவையான இடங்கள் கிளிநொச்சியில்..

- கிருஸ்ணபுரம்
- செல்வாநகர்
- மல்லாவி
- மலையாளபுரம்
- வட்டக்கச்சி
- சாந்தபுரம்
- விசுவமடு

குறிப்பாக குளங்களை அண்டிய பகுதிகள் விரும்பத்தக்கது.
(தரகர் தேவையில்லை) (9615)

**077 052 3594**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் வீதியில் 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல சூழல்
- பலாலி றோட்டில் இருந்து 300m தூரத்தில்

(தரகர் தேவையில்லை) (9679)

**076 658 3621**

## பணியாளர்கள் தேவை
## றொட்டி வேலை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு றொட்டி வேலையில் அனுபவம் உள்ள பணியாளர்கள் தேவை. தகுதி உள்ளவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரில் வருகை தரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (C-3553)

தொடர்புகளுக்கு:

**077 649 1027**

## வேலை வாய்ப்பு

எமது பண்ணைகள் புதிதாக பல மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படுகின்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ். மாவட்டங்களில்.

விண்ணப்பிக்கக் கூடியவர்கள்:

- O/L வரை படித்தவர்கள்.
- அரச வேலையில் ஓய்வுபெற்ற அதிகாரிகள், ஆசிரியர்கள்.
- விவசாய, கால்நடை ஆர்வம்.அனுபவம் மிக அவசியம்.

சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.

## குத்தகைக்கு அல்லது விலைக்கு வேண்டும்

நெல் வயல் காணிகள், தென்னங்காணிகள், தோட்டக்காணிகள், பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள் செய்ய உகந்த காணிகள்.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார், யாழ். மாவட்டங்களில். (9635)

தொடர்பு
**+9477 795 0439 / +94 (71) 703 0547**
**0041 79 3344733**

## பிரத்தியேக வகுப்பு

தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் 6 தொடக்கம் O/L வரை
தமிழ் இலக்கிய நயம்
தரம் 10, 11 (9674)

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரியர் S. ரகுபதி
**077 938 9478**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரி வீதியில் (தம்பு தோட்டம்) காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (C-3944)
**076 389 5962**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## தேவை (சாரதி, பொதி சுமப்பவர்)

யாழ். நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு சாரதி, பொதி சுமப்பவர் தேவை. சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :
வ.வ. இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்
இல.58, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (9651)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9631)

**077 814 7389 | 077 614 7333**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1 ஆம் வீதியில் 51 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நாவற்குழி சந்தியிலிருந்து 300m தூரம்
வீடமைப்பதற்கு நல்ல சூழல்
நிலப்பரப்பு ஒரு பரப்பின் விலை 5 இலட்சம். (9669)

**076 890 9259**
**077 015 0353**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் IELTS, $A_1$ UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK $A_1$ Exam.
- Exam Registration center.

வகுப்புக்கள் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.
OXFORD ENGLISH ACADEMY,
Ariyakulam junction, Jaffna. (9301)

**TP : 077 780 3970, 074 007 1970**

## உமாதவா கல்வி நிலையம் - யாழ்ப்பாணம்

கல்வியாண்டு 2022 க்கான புதிய வகுப்பு ஆரம்பம்

ஆசிரியர் திரு. க. தவயோகராசா

தரம் 3 இல் கல்வி பயிலும் (2022இல்) மாணவர்களுக்கான புதிய வகுப்பு எதிர்வரும் தைப்பூசத் திருநாளன்று 18.01.2022ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 5.00 மணிக்கு ஆரம்பமாகின்றது.

தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

தொடர்பு : 077 774 2942

இயக்குனர்
உமாதவா கல்வி நிலையம், யாழ்ப்பாணம். (9672)

## SPOKEN ENGLISH

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.

- IELTS (students visa)
- IELTS LIFE SKILLS A1 (London)

நேரடியாகவும் online மூலமாகவும் நாட்டின் எப் பகுதியிலிருந்தும் கற்கலாம். (9674)
**072 267 6713**

## தேவை

எழுதுனர் வேலைக்கு பெண் வேலையாட்கள் தேவை. (9677)

**076 986 5238**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அலுவலகத்திற்கு கணனி அறிவுடைய பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்பு (9685)
**077 887 6969**
**077 964 5877**

## மணமகன் தேவை

யாழ். இந்து, 91, கேட்டை, 2 ல் செவ்வாய், 12 பாவம், Doctor மற்றும். யாழ். இந்து, 92, பூரட்டாதி 1 ஆம் பாதம், லக். சூரியன் செவ்வாய், 50 பாவம், Doctor மணமகள்களிற்கு மணமகன்கள் தேவை.

துர்க்கா திருமண சேவை (9689)

**077 818 5978**

## கணக்காளர் தேவை

பண்ணை, தங்கும் விடுதி, உணவகம் என்பனவற்றிற்கு கணக்குகள் பார்க்கக் கூடியவர்கள். அனுபவத்திற்கு முன்னுரிமை.
இடம் : சண்டிலிப்பாய் (C-3533)

**077 078 0240**
**071 078 0240**

## DMI (ஆரியகுளம், யாழ்ப்பாணம்)

**A/L - 21 Batch**
விவசாய விஞ்ஞானம் (08)

முன்னோடிப் பரீட்சை
2022.01.17 பி.ப. (1-3) Part - I
2022.01.21 பி.ப. (1-4) Part - II

வழிகாட்டல் செயலமர்வு
22/1, 23/1 ⇨ பி.ப. (1-3)

Sasi Sir (C-3547)

- நிர்வாகம்

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**
**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3491)
**0768226240** DHL

## வெளிநாட்டு கற்கைநெறிகள் / வேலைவாய்ப்புக்கள்

கனடா / UK / சிங்கப்பூர் / மலேசியா ஆகிய நாடுகளில் CARE GIVER (முதியோர் - சிறுவர் - நோயாளர் பராமரிப்பு) COOK / HOTEL MANAGEMENT துறைகளில் வேலை வாய்ப்புக்களும் அதற்கான கற்கை நெறிகளும் (C-3492)

ஆரம்பம் - 15-01-2022 / உடனடி அனுமதிகள்



IELTS Life Skills B1
வெளிநாடு செல்வதற்கான தகைமை அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
**0777-068-777** R1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 327

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 16.01.2022 தொலைபேசி : 021 222 3378







உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:** கண்டிய நடனத்தோட யாழ்ப்பாணத்தில பொங்கல் நடந்திருக்குது. கண்டிய நடனத்திற்கும் தைப் பொங்கலுக்கும் இடையில ஏதேனும் தொடர்பு இருக்குதோ.

**விதானையார்:** பௌத்த- இந்து அமைப்பு எண்ட பேரில இந்த நடனங்கள் நடக்குதாம்.

**சாத்திரியார்:** ஏன் விதானையார் பௌத்த- இந்து உறவு வலுப்பெறுவது நல்லது தானே. பௌத்தர்களின் வாழ்க்கை முறை இந்துக்களின்ர வாழ்க்கை முறையோட ஒத்துப் போகக்கூடியது. அதுதவிர, கௌதம புத்தபிரான் ஒரு இந்து சமயத்தவர் தானே.

**விதானையார்:** சாத்திரியார் நான் அது பற்றிக் கூறவில்லை. என்னைப் பொறுத்தவரையில இந்து சமயத்திற்கும் பௌத்தத்திற்கும் இடையில நெருங்கிய தொடர்பு இருக்குது.

ஆனால் பிள்ளையார் கோயிலில புத்தரைப் பிரதிஷ்டை செய்வது, சிவன் ஆலய வளவில விகாரை அமைப்பது, இராணுவக் கட்டுப்பாட்டிற்குள்ள இருக்கக்கூடிய இந்து ஆலயங்கள் பூசை வழிபாடின்றிக் கிடப்பது இவை தொடர்பிலும் இந்த பௌத்த- இந்து அமைப்பினர் கவனம் எடுத்தால் என்ன? இலங்கையில பௌத்த மதத்திற்குத் தான் முன்னுரிமை. இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று மார்தட்டுறதை விடுத்து இலங்கையின் ஆதிச்சமயம் சைவ சமயம் என்பதையும் ஏற்றுக்கொள்ளுற வகையில பௌத்த இந்து அமைப்பினர் செயற்படவேணுமல்லோ!

விதானையார் விசுவலிங்கம் ஆக்ரோசத்துடன்கூற, ஆலடியில் சில நிமிடம் மௌனம் நிலவியது.

மௌனத்தைக் கலைக்க சிறப்பார் கனகசபை குரல் கொடுத்தார்.



## கண்டிய நடனத்தைப் புகுத்தும் புதுக் கலாசாரத்தைப் பாருங்க

**சிறாப்பர்:** விதானையார் சொல்லுறது நூறு வீதம் உண்மைதான். பௌத்த - இந்து ஒற்றுமை ஏற்படவேணுமெண்டால், முல்லைத்தீவு செம்மலையில, உருத்திரபுரத்தில, திருகோணமலையில என பழம் பெரும் சிவனாலயங்கள் அமைந்த இடங்களில புத்தர் சிலைகளை வைக்கிற வேலைகளை நிறுத்த வேணும். இதைவிட்டிட்டு பௌத்த- இந்து அமைப்பு எண்டு சொல்லிப்போட்டு பௌத்த கலாசாரத்தை இந்துசமய நிகழ்வுகளுக்குள்ள புகுத்த முற்படுவது மிகப் பெரிய கபடத்தனம்.

**மூப்பர்:** பௌத்த- இந்து மதங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துறதுக்கு எத்தனையோ காரியங்கள் இருக்கு. அந்தக் காரியங்களைச் செய்யாமல், ஆரியகுளத் திறப்பு விழாவில கண்டிய நடனத்தைப் புகுத்திறது. தைப்பொங்கலின் போது கண்டிய நடனத்தை ஆட விடுகிறதெல்லாம் வீம்பு வேலை தானே.

**சாத்திரியார்:** அது மட்டுமல்ல இப்படியான வேலைகளால நல்லை ஆதீன சுவாமிகளையுமல்லோ வில்லங்கத்துக்குள்ள விழுத்தி விடுகினம்.

**பண்டிதர்:** அதெண்டால் உண்மைதான். அது சரி நல்லூர்ப் பகுதியில ஒரு வாலறுந்த பசுமாடு ஒண்டு பெரும் துன்பப் படுகுது. அதை இந்த பௌத்த- இந்து அமைப்பினர் பார்க்கல்லயோ.

**சிறாப்பர்:** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள். கொஞ்சம் தெளிவாச் சொல்லுங்களன்.

**பண்டிதர்:** நல்லூர்ப் பகுதியில ஒரு நல்லினப் பசுமாடு வாலறுந்த நிலையில திரியுது. வால் அறுந்த இடத்தில உள்ள சதையை காகங்கள் கொத்தித் தின்னுவதைப் பார்க்கும்போது, எங்கட ஜீவ காருண்யம் இப்படியாகப் போச்சுதெண்டு நினைக்கிறதைத் தவிர வேறு ஒண்டும் தெரியல்ல.

கண்டிய நடனம் செய்யிறவியள் உந்த விடயங்களில கவனம் செலுத்தினால் புண்ணியமாவது கிடைக்குமல்லோ.

**வாத்தியார்:** பண்டிதர் சொன்ன வாலறுந்த பசுமாட்டை நானும் பார்த்தனான். அந்தப் பசுமாட்டுக்கு உரிய சிகிச்சையளிக்க அந்த மாட்டின்ர உரிமையாளர் நடவடிக்கை எடுக்கவேணும். மாடு வளர்க்கிறது மட்டுமல்ல அந்த மாடுகளை நல்ல முறையில பராமரிக்கவேணும். அதுதான் புண்ணியம்.

**விதானையார்:** அது சரி வாத்தியார், கடும் மழையில் நெல்லு அழிந்து போன விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கிற விடயத்தில ஏதேனும் முன்னேற்றம் இருக்குதோ?

**வாத்தியார்:** நட்டஈடு வழங்கிற விண்ணப்பம் முடிந்து விட்டதாம்.

**விதானையார்:** அப்ப கொஞ்சப்பேருக்கு நட்டஈட்டைக் கொடுத்துவிட்டு பாதிப்படைந்த ஏனைய விவசாயிகளுக்கு நட்டஈட்டைக் கொடுக்காமல் விடப்போகினம் எண்டு சொல்லுங்க.

**மூப்பர்:** ஏன் விதானையார் இது விடயத்தில அந்தந்தக் கமக்கார அமைப்புகள் கதைத்தால் என்ன?

**விதானையார்:** கமக்கார அமைப்பில இருக்கிற தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களுக்கு விண்ணப்பப்படிவம் கிடைத்து அவையள் நட்டஈட்டிற்கு விண்ணப்பித்துப் போட்டினம். இனியேன் அவையள் கதைக்கப் போகினம்.

பாதிப்படைந்த விவசாயிகள் தலையில கைவைக்க வேண்டியதுதான்.

**வாத்தியார்:** பாதிப்படைந்த விவசாயிகள் அமைதியாக இருக்கினம். உரிய திணைக்களங்கள் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் பாதிப்படைந்த விவசாயிகள் அனைவரும் ஒன்றுதிரண்டு ஒரு பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்துவினம்.

அப்பதான் வடக்கு ஆளுநரும் திரும்பிப் பார்ப்பார். அந்த ஆர்ப்பாட்டம் சிலவேளை ஆளுநருக்கும் கஷ்டத்தை ஏற்படுத்தலாம் எண்டு கதைபடுகுது.

இப்படி வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிடம் சிக்கிய இலங்கை



“பௌத்தம் என்கின்ற ஒற்றை ஒத்துப் போதலை மட்டும் வைத்துக் கொண்டு இலங்கை சீனாவுடன் நெருங்குமாக இருந்தால் சீனாவின் கடன் பொறியில் சிக்கி சின்னா பின்னமாவதை யாராலும் தடுக்க முடியாது.”

இரண்டு நண்பர்கள் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது கடலில் ஏதோ ஒரு பொதி மிதந்து வந்தது.

நண்பனில் ஒருவன் ஓடிச் சென்று அந்தப் பொதியை எடுக்க முற்பட்டான்.

வெகுநேரமாகியும் நண்பன் கரைக்கு வந்து சேரவே இல்லை.

பொறுமை இழந்த கரையில் நின்ற நண்பன்... நண்பா அந்தப் பொதி நமக்கு வேண்டாம். அதை விட்டுவிட்டு நீ கரைக்கு வந்து விடு என சத்தமாகச் சொன்னான்.

அதற்கு கடலிற்குள் நின்ற நண்பன் கூறினான்.

எப்போதோ அதை நான் விட்டுவிட்டேன். அதுதான் என்னை விடுவதாய் இல்லை என்று.

ஆம், கடலில் மிதந்து வந்தது பொருட்கள் நிறைந்த பொதி அல்ல, கரடி.

கரடியை இவர் தொட்டதுதான் தாமதம் கரடி இவரைப்பற்றிக் கொண்டது.

அதன் பின்பு அவர் எவ்வளவோ முயன்றும் கரடி அவரை விட்டதாய் இல்லை. இது அனைவரும் அறிந்த கதை என்றாலும் வாழ்விற்கு நல்ல படிப்பினையை எமக்குத் தருகின்றது.

அதாகப்பட்டது, தேவை இல்லாமல், ஒரு விடயத்தைப் பற்றி அலசி ஆராயாமல் மூக்கை நுழைப்போமாக இருந்தால் அந்தக்கரடியைப் பற்றியவரின் நிலை தான் நமக்கும். மீண்டு வரவே முடியாது.

கரடியைப் பற்றியவரின் நிலைதான் இப்போது இலங்கையின் நிலையும்.

சீனா என்கின்ற கரடியை தெரியாமல் தாமாக பற்றிக் கொண்டதன் விளைவு சீனா இலங்கையைச் சிக்கனப் பிடித்து விட்டதை உணர முடிந்துள்ளது.

தெற்காசியாவின் வல்லரசு என்கின்ற போட்டியில் இந்தியா- சீனா- பாகிஸ்தான் என்ற முத்துருவங்கள் போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த முத்தரப்பு மோதலில் பாகிஸ்தான் சற்று பின் தள்ளியே நிற்கின்ற நிலையில் இந்தியா- சீனா தமது பலத்தை நிரூபிக்க பிரயத்தனம் செய்து கொண்டே இருக்கின்றன.

இங்கு சீனாவின் கை உலக வல்லரசுகளுக்கே அச்சுறுத்தல் விடும் அளவில் ஓங்கி உள்ளதை, உலக பஞ்சாயத்து தலைவர் அமெரிக்காவுடன் உரசுவதனூடே உணர்ந்து கொள்ள முடிகின்றது.

பூகோள ரீதியில் இந்திய- இலங்கை உறவு மிக நெருக்கமாக இருந்த போதிலும் இரு தசாப்த காலத்திற்குள் சீனா இலங்கையில் ஆழமாய் வேரூன்றி விட்டது என்பதே உண்மையானது.

தமிழினத்தின் உரிமைசார் போராட்டத்தை அழித்தொழிப்பதற்கு பயங்கரவாதம் என்ற சாயம் பூசப்பட்டதும் அதை ஒழிக்க இந்தியாவின் அனுசரணையைப் பெற்றதையும் இலங்கை ஆட்சியாளர்கள் ஒப்புக் கொண்டதுடன் இந்திய அரசின் உதவியுடனேயே விடுதலைப் புலிகளை அழித்தோம் என பகிரங்கமாக கூறியுமிருந்தனர்.

இன-மத-கலாசார பௌதீக வளங்களி[illegible] பட்டிருக்கும் இந்தியாவுட[illegible]னான உறவை விடுத்து பௌத்த மதக் கொள்கைகள் மட்டும் ஒத்துப் போகும் சீனாவுடன் இலங்கை நெருக்கியதன் விளைவு இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாக அமைந்துள்ளது.

தனது பரம எதிரியான இந்தியாவை அச்சுறுத்தவும் சுற்றி வளைக்கவும் இலங்கையை வளைத்து, தனது வளையத்துக்குள் கொண்டு வந்து கடனைக் கொடு கொடு என்று கொடுத்து நாட்டை மீள முடியாத அளவிற்குச் செய்துள்ளது சீனாவின் கடன் பொறி.

அத்துடன் இந்தியாவுக்கு மிக நெருக்கமாக வந்து அச்சுறுத்தும் வகையில் வடக்கில் பாரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கத் திட்டம் தீட்டியுள்ளதை அண்மையில் வடக்கு மீனவர்களுக்கு உதவித்திட்டம் வழங்கிய சீனாவின் நிகழ்வு எடுத்தியம்பியுள்ளது.

தவிர, மன்னாரில் நின்று இங்கிருந்து இந்தியா எவ்வளவு தூரம் என்று கேட்டு உங்களுக்கு அண்மையில் வந்துவிட்டோம் என்ற செய்தியை இந்தியாவுக்குத் தெரிவித்திருந்தது சீனா.

கடந்த வாரம் இலங்கைக்கு சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்க்யீ விஜயம் செய்தார். இவ் விஜயத்தின் போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சீனா எமது உயிர்த் தோழன். வரலாற்றில் எவ்விடத்திலும் எம் மத்தியில் மனக் கசப்பு வந்ததில்லை எனத் தெரிவித்திருந்தார்.

குறித்த சந்திப்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்க்யீ எடுத்துக் கொண்ட புகைப் படங்கள் சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாக அமைந்தன.

அதாவது சீன அமைச்சர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கைக்குள் தனது கையைக் கோர்த்து மிகவும் இறுகப் பற்றியிருந்ததே இதற்கான காரணமாக இருந்தது.

பல வெளிநாட்டுத் தூதுவர்களை பிரதமர் சந்தித்திருந்த போதிலும் தற்போதைய சீன அமைச்சருடனான நெருக்கம் இலங்கையை சீனா சிக்கனப் பற்றிக் கொண்டதை உணர்த்துவதாய் பொருள்பட சமூக வலைத்தளங்களில் பல பதிவுகள் காணப்பட்டன.

அண்மையில் உகண்டா நாட்டுக்கு சீனா வழங்கிய கடனைத் திருப்பச் செலுத்தாததன் காரணத்தால் அந்த நாட்டின் விமான நிலையத்தை கைப்பற்றியிருந்தது சீனா.

இச் செய்தி இலங்கைக்கு சீனா எச்சரிக்கை மணியை அடித்துள்ளதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பௌத்தம் எனும் ஒரே ஒரு ஒத்துப் போதல் என்பதை மட்டும் வைத்துக் கொண்டு இலங்கை சீனாவுடன் நெருக்கம் காட்டுவது அவ்வளவு நல்லதல்ல.

அத்துடன் சீனா சர்வதேச நாடுகளைச் சீண்டும் செயலில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் இவ்வேளையில் இலங்கை சீனாவுடன் நெருங்குவது எப்பேர்ப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் இங்கு கவனித்தே ஆக வேண்டும்.

“நான் எப்போதோ விட்டுவிட்டேன். அதுதான் என்னை விடுவதாய் இல்லை” எனும் கரடிக் கதையாய் இலங்கையின் கதை மாறுமாயின் இலங்கை சீனாவின் முழு ஆதிக்கத்துக்குள் வரும் என்பது திண்ணம்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தொழில்



ஒருமுறை அக்பர் பீர்பாலிடம், "நமது நாட்டில் மக்கள் அதிகமாக மேற்கொண்டிருக்கும் தொழில் எது?" என்று கேட்டார். "மருத்துவத் தொழில் தான் "என்றார் பீர்பால்.

"என்ன விளையாடுகிறாயா? போதுமான மருத்துவர்கள் இல்லாததால், மக்கள் நோயால் வருந்திக் கொண்டிருப்பதாக அபுல் பசல் கூறினாரே.

அப்படியிருக்க, நம் நாட்டில் மக்கள் அதிகமாக மேற்கொண்டிருக்கும் தொழில் வைத்தியத் தொழில் என்று கூறுகிறாயே, இதை உன்னால் நிரூபிக்க முடியுமா?" என்றார் அக்பர்.

"நிச்சயம் நிரூபிக்கிறேன்," என்ற பீர்பால் மறுநாள் கையில் ஒரு பெரிய கட்டு போட்டுக் கொண்டு வந்து கொண்டிருந்தார்.

வழியில் ஒருவர் பீர்பாலிடம், "கையில் என்ன கட்டு?" என்று கேட்டார்.

வழுக்கி விழுந்து விட்டேன். பலமான காயம் ஏற்பட்டு கை வீங்கி விட்டது" என்றார் பீர்பால்.

"உடனே அந்த மனிதர் அதற்கு ஒரு மருத்துவம் சொல்லி, உடனடியாக அந்த மருத்துவத்தைச் செய்துகொள்ள வேண்டுமென்றும், தாமதப்படுத்தினால் கையையே இழக்க நேரிடும், "என்றார்.

இவ்வாறு போகிற வழியெல்லாம் பார்க்கிறவர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு விதமாக மருத்துவம் சொல்லினர். ஒருவாறு அரண்மனைக்குப் போய்ச் சேருவதற்குள் முப்பத்து ஆறு விதமான மருத்துவங்கள் சொல்லி விட்டனர்.

அக்பர் பீர்பாலின் கட்டைப் பார்த்து, என்னவென்று கேட்க, பீர்பால் அவரிடமும் வழுக்கி விழுந்து விட்டதாகவும், கை வீங்கி விட்டது என்றும் கூறி வழியில் பார்த்தவர்கள் சொல்லிய மருத்துவ முறைகளையெல்லாம் சொன்னார்.

"அவர்கள் கிடக்கிறார்கள் முட்டாள்கள். அவர்கள் பேச்சைக் கேட்காதே! நான் ஓர் அற்புதமான மருத்துவம் சொல்கிறேன். அதை செய்து பார். பட்டென்று வீக்கம் ஒரு நொடியில் போய்விடும்," என்றார். அதைக் கேட்ட பீர்பால் சிரித்தார்.

"பீர்பால் நான் என்ன சொல்லி விட்டேன். நீ எதற்காக சிரிக்கிறாய்?" என்று சற்று கோபமாக கேட்டார் அக்பர்.

"அரசே மன்னிக்க வேண்டும். எல்லோருக்கும் பிடித்தமானதொழில் எது என்று நேற்று என்னிடம் கேட்டீர்களே... அதற்கு பதில்இது தான்," என்றார் பீர்பால்.

அதைக் கேட்ட அக்பர், பீர்பாலை பாராட்டினார்.

# மகாபாரதம்

305



அங்கிருந்த சான்றோர்கள் கீரியின் அருகில் வந்து, "நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? சாத்திரப்படி செய்யப்பட்ட இந்த யாகத்தை ஏன் குறை கூறுகிறாய்? உனக்கு எவ்வளவு கர்வம் இருந்தால் வேதங்களை உடைய ரிஷிகளால் போற்றப்படும் இந்த யாகத்தைப் பழித்துப் பேசுவாய்?" என்றனர்.

கீரி பதில் உரைக்க ஆரம்பித்தது. ஒரு பிடி மாவுக்கு ஈடாகுது. கீரி சொல்லத்தொடங்கியது.

நான் கர்வத்தால் பேசவில்லை. உங்களுடைய யாகம் ஒருபிடி மாவுக்கு ஈடாகாது. என்று கூறினேன். கவர்ச்சியான அஸ்வமேத யாகத்தை விட அந்தணன் ஒருவன் அளித்த ஒரு பிடி மாவு எப்படி சிறந்ததாகும் என்பதை விளக்குகிறேன். கேளுங்கள்.

முன்னொரு காலத்தில் குருஷேத்திரத்தில் அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் வயல்களில் விழுந்து சிந்திக் கிடக்கும் தானியங்களைப் பொறுக்கி வந்து மாவாக்கி உயிர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு மனைவியும், மகனும் மருமகளும் உண்டு.

இந்த நால்வருடைய ஜீவனும் அந்தணர் கொண்டு வரும் தானியங்களையே சார்ந்திருந்தது. நாள்தோறும் தானியங்களைப் பொறுக்கி வருவதும், மாவாக்குவதும் வழிபாடு முடிந்த பின் நால்வரும் சமமாக அந்த மாவைப் பகிர்ந்து கொள்வதும் நடைமுறை வாழ்க்கையாய் இருந்தது.

தெய்வ வழிபாடு, வந்த விருந்தினரை உபசரித்தல் ஆகியவற்றில் அவர்து குடும்பம் நிகரற்று விளங்கியது.

கோடை காலத்தில் தானியங்கள் கிடைப்பது அரிது. ஆதலால் அக்குடும்பம் சில நாட்களில் அரைவயிறு உண்டும், முழுப் பட்டினியாயும் கூடக் காலம் தள்ளிற்று.

அத்தகைய அரிய நிலையில் இருந்த போது ஒருநாள் மாவை நால்வரும் பகிர்ந்துகொண்டு உணவு கொள்ள உட்கார்ந்த நேரத்தில் விருந்தாளி ஒருவர் வந்தார்.

விருந்தினரை உபசரிப்பதை தலையாயக் கடமையாய்க் கொண்டிருந்த அந்தணர் தமக்குரிய பங்கை அந்த அதிதிக்கு அளித்தார்.

வந்த விருந்தாளி அதனை ஆர்வத்துடன் உண்டார். பசி அடங்கவில்லை. இதனைக் கவனித்துக் கொண்டிருந்த அந்தணரின் மனைவி தன் பங்கை அதிதிக்கு அளித்தார். அதனை உண்டும் அவர் பசி அடங்கவில்லை. அவர் மகனும், தன் பங்கை கொடுத்தார். மருமகளும் தன் பங்கைக் கொடுக்க அதனை உண்ட அதிதி பசி அடங்கிற்று.

விருந்தாளியாக, அதிதியாக வந்தது தருமதேவதையே ஆகும். அங்கு வந்து அந்தணனின் தானத்தின் தன்மையை சோதித்தது. தர்மதேவதை அந்தணனை நோக்கி..

"நீர் நியாயமான வழியில் சேர்த்த பொருளை மனம் உவந்து உம் சக்திக்கு ஏற்றவாறு மனப்பூர்வமாக அளித்தது குறித்து மகிழ்ச்சி. உமது தானத்தை சுவர்க்கத்தில் உள்ள தேவர்களும் புகழ்ந்து பேசுகின்றனர்.

விண்ணிலிருந்து அவர்கள் மலர்மாரி பொழிவதைக் காணுங்கள். பிரமலோகத்தில் உள்ளவர்களும், தேவலோகத்தில் உள்ளவர்களும் உம்மை தரிசிக்க விரும்புகிறார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் வடக்கு விஜயம் தமிழ் மக்களுக்கு விடிவெள்ளி யாய் இருக்குமா?






இன்றைய அரசியலினால் மக்களின் வறுமையினை ஒழிக்க முடியுமா வியாசரே?

**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 021 567 1532 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**மாற்றம் என்பது எப்பேர்ப்பட்டதாக இருக்க வேண்டும் வியாசரே?**

மாற்றம் என்பது சடுதியாக வருவதல்ல. அதற்கு நேரம்-காலம் எடுக்க வேண்டும். அப்படி வரும் மாற்றமே மாற்றம் எனப்படும். சடுதியா ஒருவர் மாறி விட்டார் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.
மாற்றம் என்பதில் நேர்-மறை என இரண்டு உண்டு.
அதில் ஒருவரிடம் தோன்றும் மாற்றம் நேராக இருந்தால் அந்த மாற்றம் ஏற்றுக் கொள் ளக்கூடியது.
மாறாக ஒருவரிடம் வரும் மாற்றம் மறையாக இருக்குமெனின் அந்த மாற்றம் அழிவையே தரும். உலக நாடுகள் அனைத்திடமும் அணு குண்டு உண்டு எனும் மாற்றத்திலும் உலக நாடுகள் விவசாயத்தால் முன்னேறி விட்டன எனும் மாற்றம் மேலானது.

**தாரு — வதிரி**

**இந்தப் பொங்கல் எப்படி அமைந்தது வியாசரே?**

கடந்த வருடம் நெல் விதைப்பதற்காய் உழவு செய்ய உழவு இயந்திரத்தை பிடித்தேன். மூன்று மடங்கு கூலி.
விதைப்பதற்கு விதை நெல்லைத் தேடினேன். பன்மடங்கு விலை.
விதைப்பு முடிந்து உரம் எறியலாம் என்றால் உர இறக்குமதி இல்லையாம்.
இயற்கை உரம் என்று ஒரு கறுமத்தைத் தந்தார்கள். அது நாற்றம் மட்டும் தான். வயல் முழுதும் நாயும் நரியும் நின்றது.
சரி மழை வரும் என்றால் வந்து கணக்காய்ப் பெய்தது. அங்கொண்டு இங்கொண்டாய் கொஞ்சம் விளைந்திருந்தது.
கஞ்சிக்காவது உதவுமென எண்ணி அறு வடைக்குக் காத்திருக்க கடும் மழை.
இருந்த கொஞ்ச நஞ்ச கதிரும் மழை வெள்ள த்தில் அழிந்து போய்விட்டது.
அதற்கிடையில் பொங்கல் வந்துவிட்டது. பொங்கலோ பொங்கல் எங்கள் நிலையோ கந்தலோ கந்தல்.

**சுதன் — குப்பிழான்**

**ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதியிடம் இருக்கிறதே?**

இந்த நாடு சகல அதிகாரங்களையும் ஜனாதிபதியிடம் கொடுத்து விட்டு வேடிக்கை பார்க்கும் நாடு.
அப்படியாக சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. என்ன செய்ய முடியும்.
சகல அதிகாரங்களும் கொண்ட ஜனாதிப தியின் அதிகாரங்கள் எப்படிப்பட்டவை எனின் ஒரு ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றும் வலிமை கொண்டது எனின் அந்த அதிகாரத்தின் வலிமையைப் பாருங்கள்.
ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பேன் என ஜனாதிபதியானவர் முன்னாள் ஜனா திபதி மைத்திரி. அவர் சில அதிகாரக் குறை ப்புகளையும் செய்தார். என்ன செய்வது விதி அவரை நிலைக்க விடவில்லையே.

**மதுவன் — மீசாலை**

**இன்றைய அரசியலினால் மக்களின் வறுமையினை ஒழிக்க முடியுமா வியாசரே?**

ஒரு நாடு தன்னிறைவுள்ள நாடு எனின் அந்த நாட்டில் விவசாயம் உன்னதமாக மேலோங்கி இருக்க வேண்டும்.
அப்போதுதான் அது தன்னிறைவுள்ள நாடு எனப்படும்.
வறுமையை ஒழிக்க விவசாயியினால் மட்டுமே முடியும். அரசியல்வாதிகளால் வாயால் விவ சாயம் செய்யத்தான் முடியுமே தவிர சேற்றில் கால்வைக்க அவர்கள் தயாரில்லை.
உலகிற்கே உணவளிக்கும் விவசாயி தான் விளைவித்த பொருட்களை சரியான முறை யில் சந்தைப்படுத்த இடைத்தரகர்கள் இடை ஞ்சல் செய்கிறார்களே.
தைப்பொங்கல் முதன் நாள் வீட்டில் விளைந்த கரும்பை மருதனார்மடம் சந்தைக்கு எடுத்துச் சென்றேன். இடைத்தரகரிடம் சிக்கி ஐம்பது தடிகளை ஐந்நூறுக்கு விற்றேன். ஒரு தடியை நாலாக்கி ஒரு துண்டு ஐம்பது ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்தார் அவர். இதுதான் இன்றைய விவசாயிகளின் நிலை. இடைத் தரகர் மாறாத வரை விவசாயிக்கு முன்னே ற்றம் இல்லை.

**சௌந்தர் — உசன்**

**இலங்கை சோமாலியாகவாக மாறும் சாத்தியம் உள்ளதா வியாசரே?**

உகண்டா நாட்டின் சர்வாதிகார ஆட்சியாளர் இடியமீன் ஒருமுறை அதிகாரிகளிடம் நாட் டின் பொருளாதாரம் பற்றிப் பேசும் போது அதி காரிகளிடம் கூறினாராம்....
மக்களிடம் பணம் இல்லை எனின் பணத்தை அச்சிட்டு மக்களுக்கு வழங்கினால் என்ன என,
பணத்தை அச்சிடுவதால் நாடு முன்னேறாது என அவனுக்கு அதிகாரிகள் அறிவுரை கூறி அவனின் திட்டத்தை நிறுத்தினர்.
முதலில் பணத்தை அச்சிடுவதை நிறுத்த வேண்டும். இல்லையேல் ஒரு இறாத்தல் பாண் பத்தாயிரம் ரூபாய் விற்பனையாகும் நிலை வரும்.
இதை புரிந்து கொள்ள வேண்டியவர்கள் புரியாதவரை சோமாலியாவிலும் மிக மோச மான நிலை எமக்கு வந்தே தீரும்.

**பாலசுந்தரம் — அம்பன்**

**வரிசை யுகம் மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில் பாமர மக்களை அது பாதிக்கும் அல்லவா வியாசரே?**

பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படப் போகி றது என்ற அறிவித்தல் வந்தது தான் தாம தம் பணம் படைத்தவர்கள் ஐந்து மாதங் களுக்கு தேவையான பொருட்களை வாங்கி வீட்டில் பதுக்கி விட்டனர்.
அன்று உழைத்து அன்று கஞ்சி குடிக்கும் ஏழையின் நிலையை யாரும் எண்ணிப் பார்க்கவே இல்லை.
வீடுகளுக்குச் சென்று கூலி வேலை செய்பவ ர்களுக்கு இப்போது வேலை இல்லை.
ஏனென்றால் அந்த வேலைகளை வீட்டுக் காரர்களே செய்கிறார்கள்.
இந்த நிலை தொடருமாக இருந்தால் நிலைமை மிக மோசமாகும். பட்டினியால் உயிர்ப்பலி எடுப்புக்கள் ஏற்படுவதை எவ ராலும் தடுக்க முடியாது.

**மகேஸ்வரன் — வரணி**

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் வடக்கு விஜயம் தமிழ் மக்களுக்கு விடிவெள்ளி யாய் இருக்குமா?**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் தோற்கக் காரணம் எது என்பதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.
தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் கூட்டணி சேர்ந்தார் சஜித். அதை எதிரணியினர் எவ் வாறு பிரசாரம் செய்தனர் என்பதையும் சஜித் உணர்ந்து கொள்ள வேண்டும்.
வடக்கிற்கு சஜித் வருவதை புலியுடன் சேர்ந்து விட்டார் என தெற்கில் பிரசாரம் செய்யப்ப டுகிறது. இதை உணராத வரை அவரினால் எதுவும் செய்து விட முடியாது.
என்னது விடிவெள்ளியா? மோதகங்களும் கொழுக்கட்டைகளும் பார்ப்பதற்கு வேறு வேறாக இருக்கும். உள்ளுடல் ஒன்றே. புரி கிறதா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கற்பனைக் காதல்

கண்டேன் ஒரு காரிகையை
கற்பனையில் ஒரு காதல்
பலவர்ண மலர் பூங்கா அழகு
வானத்து நிலவின் ஒளி அழகு
கண் சிமிட்டும் நட்சத்திரங்கள்
மலர் தடவி வருகின்ற இளம் தென்றல்
பறவைகளின் இனிய கீச் ஒலிகள்
குழந்தைகளின் ஊஞ்சலாடும் சிரிப்பொலி
பூங்காவில் மலர்களின் நடுவே
செந்நிற மேனியில் கருங்கூந்தல் படர
செவ்விதழ் சிரிப்பிடை மின்னும் பல் வரிசை
வதனமோ-முழு நிலவோ என ஒளி வீச
உதட்டில் புருவத்தில் மை தீட்டி மெருகூட்டி
பட்டாடையில் மேனி பளபளக்க
ஒய்யார நடையில் நளினம் காட்டி
அழகிய தேரென அசையும் நடையழகு
கவரும் மேனியில் மின்னலென இடையழகு
காந்தமென கவர்ந்திழுக்கம் விழியழகு
புது உறவில் தடுமாறும் மொழியழகு
அண்ணாலும் நோக்கினேன் அவளும் நோக்கினாள்
நாணி கன்னம் சிவக்கும் வண்ணம்
கதைபேசி சரசமாட எண்ணமடி
மண்ணில் நடமாடும் வானத்து தேவதையே
இனிய உன் இளமைப் பருவம் சொர்க்கமடி
பார்த்துக் கொண்டிருக்க பகலே நீளாதா
மறைந்து நின்று நினைவிலும் கனவிலும்
என்னை அணு அணுவாய் கொல்லாதே
வந்து விடு காரிகையே

ம.திருவரதராசா,
பூந்தோட்டம்,
வவுனியா.

# உன் சொர்க்கம் உன் கையில்

அஞ்சாத நெஞ்சத்தார்க்கு
அறிவுரைகள் தேவையில்லை
நெஞ்சார்ந்த அறிவுடையோர்க்கு
கால நேரம் தேவையில்லை
பஞ்சும் நெருப்பும் பற்றிக் கொள்ள
பாவ புண்ணியம் பார்ப்பதில்லை
நவக்கிரகங்கள் இடம் மாற
ஒன்றையொன்று கேட்பதில்லை
வகுத்தவன் வகுத்தது தான்
வாழ்க்கையின் நேர்கோடு
நேர்கோட்டை வளைப்பதற்கு
மனிதனால் முடிவதில்லை
விழுகின்ற நேரத்தில் ஒருவன்
எழுந்து விட்டால் வாழ்க்கையுண்டு
வீழ்ந்தவன் நிமிராவிட்டால்
மிதிப்பதற்கு பலருண்டு
கல்வியைக் கற்கும் போது
காலங்கள் தெரிவதில்லை
கற்ற பின் காலங்கள்
போவதும் புரிவதில்லை
காலங்கள் செல்லச் செல்ல
பெற்றோரும் சுமை போல
சொர்க்கம் எங்கே என்று
தேடி நீ அலையாதே
பட்டம் பதவி பணம்
உனக்கு சொர்க்கத்தை காட்டாது
நீ தேடும் சொர்க்கம் உன் கையில்
உண்டு என்பதை நீ அறிவதில்லை
தாய், தந்தையரை நீ பார்க்கும்
வகையில் தான் உன் சொர்க்கம்
உன் கையில் வந்து சேரும்

குட்டி நகர் பாவரன்,
மகாறம்பைக்குளம்
வவுனியா.

# மன்னிக்கும் மனப்பாங்கு



மனித வாழ்வில் பல்வேறு பிரச்சினைகள்-எழலாம்
எழும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கணுமே
முகம் கொடுக்கும் போது தவறுகள் ஏற்படுமே
தவறுகளை திருத்துவது மனித இயல்பு தானே

மன்னிக்கும் மனப்பாங்கு எல்லோருக்கும் வரணுமே
மன்னிக்கா விட்டால் மனிதன் நெறி தவறுவானே
நெறி தவறிய வாழ்க்கை மனிதனை நெடியவனாக்குமே
உணர்ச்சிவசப்படும்போது தவறுகள் ஏற்படுமே

பெருந்தன்மையாக மன்னிப்பதே மனித மாண்பு
மன்னிக்க முடியாத தவறுகளும் உண்டலல்வா
சட்டம் தான் பதில் சொல்லும் நிலை ஏற்படுமல்லவா

கணவன் மனைவிக்கிடையே மன்னிப்பு அவசியமே
பிள்ளைகளின் தவறுகளை மன்னிப்பது பெற்றோர்-அல்லவா
தாய் தன் பிள்ளையின் தவறை மறைக்க முடியுமா
உரிய முறைப்படி கண்டித்து திருத்திட வேண்டுமே

எஸ்.பி.தனா
தெல்லிப்பழை.

# மௌனத்தின் தேடல்- 545



## பரம்பொருளே!

மணல் மீது உருவாகி
மனம் மீது அமர்கின்ற மாதவனே
சுழல் காற்று உனை சூழ்கின்ற போதும்
குலையாத குல சேகரனே
மலைபோல வரும் துன்பம்
மடுவாக்கிய மணவாளனே
தரைமீது பிறை சூடி
எனை ஆளும் பெருமானே

கும்பவாழியான்
உடுப்பிட்டி.

## ஈசனை வேண்டுகிறோம்

மண்ணில் இருந்து சுயம்பாய் வெளித் தோன்றி
அருள் புரியும் எங்கள் ஈசனே
கயிலை மலை வாசனே
இன்று பரவும் கொடிய கொரோனாவால்
உலகமே திணறி நிற்கிறது
உலக மக்கள் மீது
கருணை காட்டப்பா கொடிய
கொரோனாவுக்கு நீ முடிவு கட்டப்பா

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை.

## பேராற்றல் நீ

இப் பிரபஞ்சத்தையே தாங்கி நிற்கும்
பேராற்றல் நீ, நீ தூணிலும்
துரும்பிலும் இருக்கக்கூடியவர்
ஐம்பூதங்களின் ஆக்க மூலமும் நீ
அதன் ஒன்றாம் நிலத்திலிருந்து
நீ மலர்ந்தெழுந்தாய் ஐயனே!

க.பவானி
கொக்குவில்.

## பசிக்கு உணவு பகிர்வாயேல்

தெய்வம் ஒன்றே யாமென
உணர்ந்தாயா ஏன்
திருத்தலங்கள் பலவாமென அறிவாயா
உய்யும் வழியில் உன்னை நீ
உணர்ந்தால் நீயும் இறைதானே
அன்பு கருணை காட்டிப்
பிறர் துன்பம் போக்கிடவும்
பசிக்கும் உணவு பகிர்வாயேல்
பரமனாகத் தெரிவாய் நீ!

வை.கந்தசாமி
நாரந்தனை.

## உதயம்

கங்கையை சடையில் வைத்து
தேய்ந்து போன சந்திரனையும்
சடையில் வைத்து
ஆதிசேசனின் விசத்திலிருந்து
தேவ அசுரர்களையும் காப்பாற்றி
விசம் உண்ட் கண்டர் என்ற
பெயர் எடுத்தவருமான சிவன்
நம் இன மக்களின்
கண்டத்தை காப்பாற்ற
பூமியில் பிளந்து வந்தால்...?

இரா.ஜெ.துஷ்யந்தா
மாதகல்.

# மௌனத்தின் தேடல்- 546



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## சிவசக்தி

சிவமாகிய இயற்கையும் சக்தியாகிய இயற்கையும்
சிவசக்தி என போற்றிய மத சிலையை, அன்பு வெள்ளத்தை
அனர்த்த வெள்ளம் அழிக்காது என சித்திரிக்கும் காட்சி!

சி.சுகிர்தமலர், உரும்பிராய்.

## காணிப்பசி

ஓசையின்றி ஓடோடி வரும் ஆசைகளே துயரத்திற்குக் காரணம்
இதையே போதி மாதவரும் போதித்தார்
கதையோ யின்று வேறு மாதிரி தோண்டு மிடமெங்கும் தெரிவது
தொல்பொருட்கள் என்கிறார் புதைத்த பொருள் புதையலாயிற்று
பதை வதைகள் அதிகரிப்பைக் கண்ட ஆதிசிவனார்
மண்ணிலிருந்து விஸ்வ ரூபமாய் மேல் எழுகின்றார்.


க.நாகராசா, நுணாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**வெள்ளரிக்காய், கரட் போன்ற வற்றோடு சத்தான குழைகளின்மீது உப்புநீர் தெளித்து பெரிய தட்டில் வைத்திருப்பர். கடலை அல்லது கத்திரிக்காய்க் கறி. சிலவேளைகளில் இரண்டையும் சேர்த்து குழம்பு என்ற பெயரில் ஒரு திரண்ட சிவப்புத் திரவத்தை அலுமினியக் குழியில் வார்த்து வைத்திருப்பர்.**

## வலி சொல்லும் தொடர்... 16




சமையலுக்கு கத்தியோ, எந்தவிதமான கூரான பொருளோ பயன்படுத்த அனுமதியில்லை என்று முன் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. தேவையான காய்கறிகளை முதல்நாளே பட்டியல் போட்டுக் கொடுக்க, முகாம் சமையல்காரர்கள் வெட்டிக்கொடுத்திருந்தார்கள்.

அகதிச் சமையல்காரர்களை மேற்பார்வையிடுவதற்கு நான்கு பிரத்தியேக உத்தியோகத்தர்கள் சமையலறையில் பணியிலிருந்தார்கள். முகாமின் தென் மூலையிலிருக்கும் விசாலமான சாப்பாட்டு மண்டபத்துக்கென்று தனியான வரலாறு உள்ளது. இந்த முகாமில் அகதிகள் அனுபவித்த அதே காயங்களையும் கலவரங்களையும், சாப்பாட்டு மண்டபமும் சந்தித்திருக்கிறது.

பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த அகதிகள் தங்கவைக்கப்பட்டிருக்கும் இந்த முகாமில், சமையலென்பது அநேக நாட்களில் பொதுவானதாகவே தயாரிக்கப்பட்டது. எந்த நாளும் சோறு இருக்கும். அதில் பிரச்சினையில்லை.

வெள்ளரிக்காய், கரட் போன்ற வற்றோடு சத்தான குஂழைகளின்மீது உப்புநீர் தெளித்து பெரிய தட்டில் வைத்திருப்பர். கடலை அல்லது கத்திரிக்காய்க் கறி. சிலவேளைகளில் இரண்டையும் சேர்த்து குழம்பு என்ற பெயரில் ஒரு திரண்ட சிவப்புத் திரவத்தை அலுமினியக் குழியில் வார்த்து வைத்திருப்பர்.

அவுஸ்திரேலிய பொதுச் சமையலறைகளில் குழம்பு தயாரிப்பது என்று முடிவெடுத்துவிட்டால், உறைப்பு, புளிப்பு சகலத்தையும் அந்தத் தகரத் தக்காளியே பொறுப்பேற்று ஒப்பேற்றித்தரும் என்று சமையல் பிரியர்கள் நம்புகிறார்கள்.

தாளிதங்களைக் கொட்டி, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அடுப்பிலிருந்து இறக்கிவிட்டால், அது குழம்பு என்று திருப்திகொள்கிறார்கள். ஆசியச் சமையல் பாரம்பரியங்களின் அடிப்படையிலான எந்த உபரியான வஸ்துகளும் இந்தக் குழம்பு கறிகளில் இருக்காது.

இப்படிப்பட்ட கறிகளில் எதிர்பார்த்த சுவை கிடைக்காது என்பதற்கு அப்பால், குறிப்பிட்ட நேரத்துக்கு சமிபாடு அடைவதற்கும் இந்தவகை சமையல்கள் பெருந்தடை என்பது அடுத்த பெரும் சோகம்.

முகாமின் மதிய நேரச் சாப்பாட்டிலிருக்கிற ஒரே நம்பிக்கை, வதக்கிய கோழி அல்லது உருளைக்கிழக்கு வறுவல். கூடவே, சிலவேளைகளில் அவித்த முட்டை கொடுப்பார்கள்.

சாப்பாட்டு நேரம் வரைக்கும் மண்டபம் பூட்டியே கிடைக்கும். உள்ளே "தயார்" என்று அறிவித்ததும், உத்தியோகத்தர்கள் பிரதான கதவைத் திறந்துவிடுவார்கள். அதுவரைக்கும் வெளியில் காத்திருந்த பசியின் நீண்ட வரிசை உள்ளே புனலெனப் பாயும்.

எல்லோருக்கும் முதல், தடவை பரிமாறிய பிறகு, இரண்டாவது தடவை வேண்டுமானவர்கள் மீண்டும் வரிசையில் நின்று கேட்டுண்ணலாம்.

இரவுச் சாப்பாட்டுக்கும், கிட்டத்தட்ட இதேமாதிரியான சாப்பாடுகள்தான். சமையலறையின் ஒரு மூலையில், பாண் - பட்டர் போன்றவற்றை எப்போதும், எத்தனை தடவையும் எடுத்துச் சாப்பிடலாம் என்ற வசதியுள்ளது.

இந்த ஒட்டுமொத்தச் சாப்பாட்டு மண்டப ஒழுங்குகளைக் கண்காணிப்பதற்கு, மதிய, இரவு உணவு வேளைகளில் ஆறேழு உத்தி யோகத்தர்கள், அத்தனை அகதிகளையும் கண்காணித்தபடியிருப்பர். அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

இந்த சம்பூர்ண கலவரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு, பத்து, பதினைந்து உத்தியோகத்தர்களாவது தேவைப்படுவர். கதிரைகள் உடையும், தட்டுக்குள் பறக்கும், பெண்கள் குழறுவர், குழந்தைகள் வீறிடுவர். சாப்பாடு கழுவாத கைகளோடு, குழப்பவாதிகள் வெளியே இழுத்துச் செல்லப்படுவர்.

இதற்கெல்லாம் சாப்பாடு மட்டும் காரணமாவதில்லை. சாப்பாட்டு வேளையில், முகாமிலுள்ள எல்லோரும் அங்கு கூடவேண்டியது கட்டாயமென்பதால், தங்களுக்குள் பிரச்சினையானவர்களும் ஆளையாள் சந்திக்கவேண்டியிருக்கும்.

எவ்வளவுதான் கோழி வதக்கலும், உருளைக்கிழங்கு வறுவலும் கண்முன்னே கிடந்தாலும், மதியமோ, இரவோ ஒரு சண்டை போட்டால்தான் சோறு செமிக்கும் என்று முடிவோடு எவனாவது சாப்பாட்டு மண்டபத்துக்குள் நுழைந்து விடுகிறபோது, உத்தியோகத்தர்கள் மருந்துப் பையோடு ஓடித்திரியவேண்டியது அங்கு நிர்பந்தமாகிவிடும்.

"சார்ளி" கம்பவுண்டில் பஸ்னா பேகம் என்ற ஐம்பதுகளில் மதிக்கத்தக்க தாயும், அமீரா என்ற அவள் மகளும் தங்கியிருந்தார்கள். இந்தோ னேசியத் தகப்பனுக்கும், ஈராக் தாயாருக்கும் பிறந்த அமீரா, பதினேழு வயதில் தாயோடு படகேறி அவுஸ்திரேலியா வந்தாள்.

ஈராக்கிலிருந்து இந்தோனேசியாவுக்கு அகதியாக வந்த பஸ்னா பேகம், இந்தோனேசிய வாகன ஓட்டியொருவரை செமன்யாக் சுற்றுலா நகரில் கண்டு, காதலித்துத் திருமணம் செய்தாள்.

திருமணத்தின் பின்னர், இந்தோனேசியா வைப் புகுந்த நாடாகக் காதலித்து வாழ்க்கை நடத்தினாள்.

ஒருநாள், செமன்யாக் பகுதியில் குரங்குகளை ஏற்றிச்செல்லும் லொறியொன்றுடன் இடம்பெற்ற விபத்தில், பஸ்னா பேகத்தின் கணவன் பலியானான்.

கணவரின் ஜனாஸாவை அடக்கம் செய்த அன்றைக்கே, தனது வாழ்க்கையை வேகமாகச் சிந்தித்தாள் பஸ்னா பேகம். அவுஸ்திரேலியாவை நோக்கிய தனது ஓட்டத்தில் இந்தோனேசியா ஓர் இடைத்தங்கல் நாடு என்பதுபோலத்தான் தன்னுடைய கணவரின் மரணம் நிகழ்ந்திருப்பதாக உணர்ந்தாள்.

அன்று இந்தோனேசியாவில் லைபரோன் பண்டிகை விடுமுறை. இரண்டு நாள்களுக்கு நாடு முழுவதும் கொண்டாடித் தீர்க்கும் இந்தப் பெருநாளில் அகதிகளை அவுஸ்திரேலியாவுக்கு ஏற்றுபவர்கள், மிக நேர்த்தியாகத் தொழில் செய்யத் தொடங்கிவிடுவது வழக்கம். ஏனெனில், பண்டிகை நாட்களில் இந்தோனேசியக் கடற்படையினர் கடல் கண்காணிப்புகளை பெரிதுபடுத்துவதில்லை.

அந்தரித்து அகதிகளாக ஓடுபவர்களை நடுக்கடலில் வைத்துப் பிடித்து, அவர்களது சாபத்தைப் பெற்றுவிடக் கூடாது என்று, ஆண்டவரின் பெயரால், படையினர் கடலில் இறங்க மாட்டார்கள்.

(அடுத்தவாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## பிரதிக்ஞை




அகூதா அளித்த பெரும் கொம்புகள் பயங்கரமாகவே ஊதப்பட்டதால் அகூதாவே வந்துவிட்டானென்ற எண்ணத்தாலும் அந்தப் பெரும் கொள்ளைக்காரனிடம் உள்ள அச்சத்தாலுமே அக்ஷயமுனைக் கடலோடிகளும் கோட்டை வீரரும் பதுங்கிப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்கிறார்களென்ற உண்மையை விளக்கியும், வந்திருப்பது யார் என்று தெரிந்த மாத்திரத்தில் ஏற்படக்கூடிய பயங்கர விளைவை விபரித்துச் சொல்லியுங்கூட இளையபல்லவன் எதையும் லட்சியம் செய்யாமல் தன் திட்டத்தை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டதையும் மரக்கலத்தை நங்கூரம் பாய்ச்சவும், கரைக்குச் செல்லப் படகொன்றை இறக்கவும் அவன் உத்தரவிட்டதையும் கண்ட கண்டியத் தேவனும், அமீரும் பிரமிப்பின் எல்லையை மட்டுமின்றி, அவனது அளவற்ற துணிவைக் கண்டு பெரும் கலவரத்தை அடையவே செய்தார்கள்.

அந்தக் கலவரத்தில் ஆழ்ந்தும் விட்டதால் கண்டியத்தேவன் அடியோடு ஊமையாகி விட்டாலும் அமீர் மட்டும் கடைசி முறையாகச் சற்றுக் கடுமையாகவே எச்சரிக்கத் தொடங்க, "இளையபல்லவர் தமது திட்டத்தின் பலாபலன்களை நன்கு உணர்ந்திருக்கிறாரென்று நினைக்கிறேன்" என்றான்.

அமீர் சம்பாஷணையைத் துவங்கு முன்பே நங்கூரம் நீருக்குள் இறக்கப்பட்டதால் திடீரெனத் தேங்கிவிட்ட கப்பலின் ஆட்டத்தில் சிறிது அசைந்த இளையபல்லவன் அமீரின் மீது தன் ஈட்டி விழிகளை நாட்டிச் சொன்னான், "பூரணமாக உணர்ந்திருக்கிறேன் அமீர்" என்று.

"திட்டம் அபாயமானது" என்று வலியுறுத்தினான் மீண்டும் அமீர்.

ஆனால் அவசியமானது" என்று சுட்டிக் காட்டினான் இளையபல்லவன், முகத்தில் எந்தவித உணர்ச்சியும் பரவவிடாமல்.

"என்ன அவசியம் நேர்ந்திருக்கிறது இப்போது?" என்று கேட்டான் அமீர்.

இளையபல்லவன் இரு விநாடிகளில் ஏதோ யோசித்துவிட்டு, "அமீர்! இந்தக் கப்பல் நமக்கு ஏன் கொடுக்கப்பட்டது.

"அமீரின் பெருவிழிகள் நன்றாக மலர்ந்து தலைவனை ஏறெடுத்து நோக்கின. "நமக்கு என்று சொல்வது பொருந்தாது தலைவரே! தங்களுக்கு என்று சொல்வது தான் தகும். பாலித்தீவின் கிழக்குப் பகுதியை அகூதா தாக்கியபோது தாங்கள் காட்டிய அபாரத் துணிவுக்கும், போர்த்திறனுக்கும் தோல்வியுற இருந்த சந்தர்ப்பத்தை வெற்றிச் சந்தர்ப்பமாக மாற்றிய உங்கள் நுண்ணறிவுக்கும், என் குருநாதர் அளித்த பரிசு இந்தக் கப்பல். இது உங்கள் சொந்த மரக்கலம்..." என்று சொல்லிக்கொண்டு போனவனைக் கைநீட்டித் தடுத்த இளையபல்லவன், "அதைக் கேட்கவில்லை அமீர், இந்தக் கப்பலை அகூதாவிடமிருந்து எதற்கு வாங்கினேன், தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியும், சொந்த நாடு செல்ல" என்றான் அமீர்.

"இல்லை, அமீர் இல்லை. சொந்த நாடு செல்ல அல்ல, சொந்த நாடு செல்ல நாம் அக்ஷயமுனைக்கு வரவேண்டிய அவசியமே இல்லை" என்று திட்டமாக அறிவித்தான் இளையபல்லவன்.

இதைக் கேட்ட மாத்திரத்தில் அமீர் சிறிதும் வியப் படையவில்லையென்றாலும் கண்டியத்தேவன் மட்டும் பிரமிப்புக்குள்ளாகி, "என்ன! சொந்த நாடு செல்ல அல்லவா?" என்று வார்த்தைகளை உதிர்த்தான்.

"அல்ல". உறுதியுடன் வந்தது இளையாபல்லவன் பதில்.

"பின் எதற்கு இந்த மரக்கலம்? ஏன் அக்ஷ்யமுனை வந்தோம்?" ஏமாற்றமும் திகிலும் நிரம்பி நின்றன கண்டியத் தேவன் கேள்வியில்,.

"நாட்டுப் பணிக்காக இந்த மரக்கலத்தைப் பெற்றேன். நாட்டுப்பணியை முன்னிட்டே இங்கு வந்தேன்" என்றான் இளையபல்லவன்.

"நாட்டுப் பணிக்கு இங்கு வருவானேன்?" என்று வினவினான் கண்டியத்தேவன். "இதுதான் அதற்குச் சரியான இடம்.

"கொள்ளைக்காரர் இருக்கும் இந்த அக்ஷயமுனையா!"

ஆம்.
"ஏன்"

"நாமும் கொள்ளையடிக்கலாம்.

"சோழர் படைத்தலைவருக்கு அந்த ஆசை வேறு இருக்கிறதா?"

"அது மட்டுமல்ல...

"அடுத்த சேவை எது?"

"எதிரிகளின் கப்பல்களைக் கொளுத்தவும் கொளுத்தலாம்."

"மிகச் சிறந்த பணிதான்" என்ற கண்டியத்தேவன் குரலில் ஏளனமிருந்தது. ஆனால் அதை ஒப்புக்கொண்டு பதில் கூறிய இளையப்பல்லவன் குரலிலோ முகத்திலோ ஏளனமுமில்லை, இகழ்ச்சிக் குறியுமில்லை. எதிரில் பற்பலவித சிந்தனைகளுடன் நின்றிருந்த அமீரையும் கண்டியத் தேவனையும் தன் கண்களால் சில விநாடிகள் ஆராய்ந்து விட்டு, "முன்பே உங்களிருவரிடம் நான் என் குறிக்கோளைத் தெரிவித்திருக்க வேண்டும்" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்துச் சற்றே தாமதித்த இளையபல்லவன், "அமீர்! தீவிர யோசனைக்குப் பின்பே நான் இந்த முடிவுக்கு வந்தேன். அதுவும் நமது எதிரிகள் நிலத்தில் மட்டுமின்றி நீர்ப்பரப்பிலும் நமக்குச் சென்ற வருடத்தில் விளைவித்துள்ள அநீதிகள் அனந்தம். தென் கலிங்கத்தின் அநீதியிலும் கொடுமையிலும் தமிழர்கள் வாடுகிறார்கள். சோழ நாட்டுக் கப்பல்களுக்கும் பாலூர் பெருந்துறையில் பீமன் இடம் கொடாதது மட்டுமல்ல, கலிங்கத்தின் மரக்கலங்களைக் கொண்டு ஸ்ரீவிஜயத்தின் நீர் வழிகளிலும் தமிழர் கப்பல்களுக்குப் பெரும் இடைஞ்சல் விளைவித்து வருகிறான். அகூதாவின் கப்பலையே கடாரத்துக்கருகில் கலிங்கத்தின் மரக்கலம் ஒன்று மடக்கியதை நாம் பார்க்கவில்லையா?" என்றான்.

மெள்ள மெள்ள இளையபல்லவனின் நிலை அமீருக்குப் புரியலாயிற்று. "ஆம், ஆம். பார்த்தோம்" என்றான் பதிலுக்கு.

"கலிங்கத்தின் மரக்கலங்கள் தமிழகத்தின் இரண்டு மூன்று சிறு கப்பல்களை நாசம் செய்ததாகவும், தமிழ் மாலுமிகளைச் சிறைப் பிடித்ததாகவும் செய்தி கிடைக்கவில்லையா?" என்று மீண்டும் கேட்டான் இளையபல்லவன்.

"ஆம். அந்தச் செய்தி பாலித் தீவில் இருக்கையில் கிடைத்தது" என்றான் கண்டியத்தேவன்.

இளையபல்லவன் இருமுறை தளத்தில் உலாவி விட்டு அந்த இருவர் எதிரிலும் நின்றான். "அன்று தீர்மானித்தேன். கலிங்கத்தின் கடற்படைப் பலத்தை என்னால் முடிந்த வரையில் முறிப்பதென்று. முறிப்பது மட்டுமல்ல, ராஜராஜசோழர் காலத்திலும், ராஜேந்திர சோழ தேவர் காலத்திலுமிருந்த தமிழர்களின் கடலாதிக்கத்தை மீண்டும் நிலை நிறுத்துவதென்றும் அன்றே பிரதிக்ஞை செய்தேன்.

அந்தப் பிரதிக்ஞையை நிறைவேற்றவே இந்த அக்ஷ்யமுனை வந்தேன். இங்கு நமது கப்பலை நல்ல பலமுள்ளதாகச் செய்து பழுதும் பார்ப்போம். புதுப்புது விதப் போர்க்கலங்களை இதில் பொருத்துவோம்! பிறகு கடலோடுவோம்! கடலோடி, கலிங்கக் கப்பல்களை மறிப்பதற்கும், பிடிப்பதற்கும், அழிப்பதற்கும் கடலில் முகத்தை நீட்டிக் கொண்டிருக்கும் இந்த அக்ஷய முனையைத் தவிர வேறு சிறந்த இடம் கிடைப்பது கஷ்டம்" என்று விளக்கவும் செய்தான் சோழர்களின் படைத் தலைவன்.

"தங்கள் திட்டத்துக்குத் தேவையான மாலுமிகள் இல்லையே" என்றான் அமீர்.

"இப்பொழுது ஐம்பது பேர் நம் மரக்கலத்தில் இருக்கிறார்கள்?" என்றான் இளையபல்லவன்.

"இன்னும் நூறு பேர் வேண்டும்" என்றான் அமீர்.

"அதோ கடற்கரைக் குடிசைகளிலிருக்கும் கொள்ளைக்காரர்களிலிருந்து பொறுக்கிக் கொள்வோம்" என்று பதில் கூறினான் இளையபல்லவன்.

இந்தச் சமயத்தில் குறுக்கிட்ட கண்டியத்தேவன், "இளையபல்லவரே! அவர்கள் கொள்ளைக்காரர்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்" என்றான் இடைமறித்து.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேள் திரைவிமர்சனம்




ஒரு அரக்கனின் மனதில் தாய்ப்பாசத்தை ஊட்டி அவனுக்கு அன்பின் வலியை உணர்த்தும் படம். இங்கு எடுக்கும் பல படங்களும் ஆங்கிலம், கொரியன் அல்லது இரானிய படங்களின் அப்பட்டமான கொப்பிதான் என்றிருக்க, சிலர் மட்டுமே இங்கிருந்து உருவான கதை என்பதை வெளிப்படையாக அறிவிக்கிறார்கள். அப்படி கொரிய மொழிப்படம் ஒன்றின் எடுத்தாளல் இது என்பதைச் சொல்லியே படத்தைத் தொடங்கும் இயக்குநர் ஹரிகுமாரின் மனச்சாட்சிக்கு முதலில் வந்தனம் சொல்லி விடலாம்.

கோயம்பேடு சந்தையில் தொடங்கும் படத்தில் காய் கனிகளைத் தாண்டி முக்கியமான தொழிலாக இருப்பது கந்து வட்டி என்கிற பணம் விளையும் தொழில்தான் என்று சொல்லியே படத்தை ஆரம்பிக்கிறார்கள். வியாபாரத்துக்காக பணம் தேவைப்படும் வியாபாரிகள் பணத்தை வட்டிக்கு வாங்கிவிட்டு ஒழுங்காக திருப்பிக் கொடுக்காவிட்டால் அதற்கென்றே அரக்கனாக வளர்க்கப்பட்ட அடியாளான பிரபுதேவா நேரில் சென்று அடித்துப் பிடுங்குவார்.

இரக்கம் என்பது துளியும் இல்லாத அவரது அறிமுகம் அவர்மீது வெறுப்பை உமிழ வைக்கிறது. அம்மாவை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு இவருக்குக் கொடுக்க வேண்டிய பணத்தையும் ரெடி பண்ணிவிட்ட பரணியை மருத்துவமனை புகுந்து அவர் அம்மா கண்முன்னேயே வட்டிக்கு வட்டி கேட்டு அடித்துத் துவைக்கும் பிரபுதேவாவை யாரும் சபிக்கவே செய்வார்கள். அப்படி சபித்தால்தான் அந்தக் கரக்டர் நியாயம் பெறும்.

அந்த அரக்கனை ஒருபக்கம் அந்த ஏரியா டான்சர் ஆன சம்யுக்தா ஹெக்டே காதலித்து துரத்த இன்னொரு பக்கம் நானதான் உன் அம்மா" என்று ஈஸ்வரி ராவ் பாசத்தைக் காட்டித் துரத்துகிறார். அந்த அம்மாவுக்கும் அதே கதிதான். மார்கெட்டில் வைத்து ஈஸ்வரி ராவுக்கு நாலு அறை விடுகிறார் பாருங்கள் பிரபு தேவா. அவரைப் பெற்ற வலியைவிட அது அந்தத் தாய்க்கு பெரிய வேதனையைத் தந்திருக்கும். அப்படிப்பட்ட கல் நெஞ்சனைக் கரைத்து தாய்ப்பாசத்துக்குள் கொண்டு வரும் தாயின் நோக்கம்தான் மீதிக் கதை.

சிரித்தால் குழந்தையாகவும் முறைத்தால் கொடூரமாகவும் தோன்றும் முகம் பிரபுதேவாவுக்கு. ஆனால் இதில் அவருக்கு சிரிக்கவே வாய்ப்பு தரப்படவில்லை என்பதுதான் கொடூரம்.

அந்த கொடிய முகத்துடனான அவரது பொடி லாங்குவேஜ் அந்தக் கரக்டருக்கு நியாயம் சேர்க்கிறது. தன் கண் முன்னே ஒரு குழந்தையை பிரசவிக்க ஒரு பெண் எத்தனை வேதனைப்படுகிறார் என் பதை கண்ணுற்று தாயின் பெருமையை அவர் உணரும் கட்டத்தில் அற்புதமாக செய்திருக்கிறார் நடனப் புயல். ஆனால், அவர் நடனமும் ஆடவில்லை என்பது இன்னொரு சோகம்.

இப்படி ஒரு நாயகியாக நடித்ததற்கே சம்யுக்தா ஹெக்டேவைப் பாராட்டலாம். அவரது அறிமுகக் காட்சியே பிரபுதேவாவின் இச்சையைத் தீர்த்து அதற்கு ரேட்டும் வாங்கிக் கொண்டு போவதுதான். பப்பில் ஆடும்போதும், பிரபுதேவாவைக் காதலிக்க ஆடும்போதும் வில்லாக வளைகிறார். அந்த நளினங்களுக்கே சொத்துள்ளவர்கள் மிஸ். ஹெக்டேவுக்கு ஹெக்டேர் கணக்கில் நிலம் எழுதி வைக்கலாம்.

பிரபுதேவாவின் அம்மாவாக கிளைம் பண்ணிக்கொண்டு வரும் ஈஸ்வரி ராவ் இத்தனை இளமையுடன் இருக்கிறாரே என்று பார்த்தால் நல்லவேளை அவரது 15 வயதி லேயே பிரபுதேவா பிறந்து விட்டதாக லொஜிக் சொல்லப்படுகிறது.

இருந்தாலும் ஒரு சீனில் நரை முடியும், இன்னொன்றில் இல்லாமலும் வருவதை கவனித்து தவிர்த்திருக்கலாம். முன்பாதியில் யோகிபாபு வந்து படத்தின் வறட்சியை முடிந்த அளவில் தணித்திருக்கிறார்.

ஹீரோவும், இயக்குநரும் மாஸ் டர் கிளாஸ் நடன மாஸ்டர்களாக இருக்க, படத்தில் நடனத்துக்கு இன்னும் ஒதுக்கீடு கொடுத்திருக்கலாம்.

சி.சத்யாவின் இசையில் அமைந்த தாய்ப்பாசப் பாடல் உருக்குகிறது. பின்னணி இசையிலும் பின்னி எடுத்திருக்கிறார். விக்னேஷ் வாசுவின் ஒளிப்பதிவில் தெரியும் நிறத்தில் படத்தின் தன்மை உணரவைக்கப்படுகிறது. பரபரப்பான மார்க்கெட்டில் அநாயசமாக படம்பிடித்து பாராட்ட வைக்கிறார். அந்தக் காட்சிகளில் இயக்குநரின் சாமர்த்தியமும் தெரிகிறது. முன்பாதியில் மெதுவாக நகரும் திரைக்கதை தாய்ப்பாசம் தொட்டதும் ஜிவ்வென்று கிளம்பி அதன் பின் னணி தெரியும் நேரம் விறுவிறுப்பு பெறுகிறது. இதெல்லாம் கோயம்பேடு மார்க்கெட்டிலா நடக்கிறது என்று வியாபாரிகள் போர்க்கொடி தூக்காத அளவில் சரிதான்.

**தேள் ஒரு தாயின் சபதம்.!**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : சூரியகாந்தி
இயற்றியவர் : வாலி
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : மனோரமா



தெரியாதோ நோக்கு தெரியாதோ
சின்ன பருவத்திலே காதலிப்பது
பைத்தியம்போல் தோனுமுன்னு தெரியாதோ

தெரியாதோ நோக்கு தெரியாதோ
சின்ன பருவத்திலே காதலிப்பது
பைத்தியம்போல் தோனுமுன்னு தெரியாதோ

அவளவா ஆத்துக்குள்ளே ஆயிரம் இருக்கும்
காதல் ஆரம்பிக்கும் நேரம் முதல் நாடகம் இருக்கும்
தானா சிரிப்பா அவ தனியா நடப்பா
ஏதோ நினைப்பா சும்மா பேசிண்டே இருப்பா

தெரியாதோ நோக்கு தெரியாதோ
சின்ன பருவத்திலே காதலிப்பது
பைத்தியம்போல் தோனுமுன்னு தெரியாதோ

பூஜைக்காக போறவம்போல் ஆம்பிளை போவான்
அங்கே பூஜை தேடி பொம்மனாட்டி நேரத்தில் வருவா
சாமியக்கண்டாளா அவ பூஜயக்கண்டாளா
அந்த சாமியக்கண்டாளா அவ பூஜயக்கண்டாளா
வந்த மூர்த்தியக்கண்டாளா பையன் மூஞ்சியக்கண்டாளா

தெரியாதோ நோக்கு தெரியாதோ
சின்ன பருவத்திலே காதலிப்பது
பைத்தியம்போல் தோனுமுன்னு தெரியாதோ

படத்த பாத்து பட்ட பாடு நடத்திப்பாக்குறான்
சினிமாபடத்த பாத்து பட்ட பாடு நடத்திப்பாக்குறான்
அவ பழைய கால ரூயட் பாட்ட பாடி பாக்கறா
மனமோகனா....
அங்கே வாடுதே கனவெனும் என் மனம்
தரையில் உருள
அவன் தலயைத் தடவுறான்
இவ தரையில் உருளறா
அவன் தலயைத் தடவுறான்
அறையில் நடப்பதை அவ அம்பலமாக்குறா

தெரியாதோ நோக்கு தெரியாதோ
சின்ன பருவத்திலே காதலிப்பது
பைத்தியம்போல் தோனுமுன்னு தெரியாதோ

தெரியாதோ நோக்கு தெரியாதோ
சின்ன பருவத்திலே காதலிப்பது
பைத்தியம்போல் தோனுமுன்னு தெரியாதோ

# பிரதமர் மோடியின் உயிருடன் விளையாட்டா?

ஜனவரி 5 ஆம் திகதி பஞ்சாப் மாநிலத்தில் ஒரு மேம் பாலத்தின் மீது பிரதமர் நரேந்திர மோடி பயணம் செய்த கார் 20 நிமிடங்கள் நின்றது. இந்தியா முழுக்க பரபரப்பான விவாதப் பொருளாகியிருக்கிறது.

"பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யாமல் பிரதமரை ஆபத்தில் சிக்க வைத்தது பஞ்சாப்பை ஆளும் காங்கிரஸ் அரசு. பிரதமரை காங்கிரஸ் வெறுக்கிறது. இன்று அவருக்கு ஆபத்து ஏற்படுத்தவும் துணிந்து விட்டது" என்று பா.ஜ.க. குற்றம் சாட்டுகிறது. பெரும் ஆபத்திலிருந்து பிரதமர் தப்பிவிட்டதாகக் கருதி, பா.ஜ.க.தலைவர்கள் வழிபாடுகள் செய்கிறார்கள், போராட்டம் நடத்துகிறார்கள்.



இன்னொரு பக்கம் "ஒரு பஞ்சாபியாக, பிரதமரைப் பாதுகாக்க நான் உயிரையும் கொடுப்பேன். அவருக்கு ஆபத்தும் ஏற்படவில்லை. பிரதமரைப் பாதுகாப்பதிலும் நாங்கள் குறை வைக்கவில்லை" என்கிறார் பஞ்சாப் முதல்வர் சன்னி.

பத்தின்டா விமான நிலையத்தில் வந்திறங்கிய மோடி, அங்கிருந்து ஹெலிகொப்டரில் ஹுசைனிவாலா மற்றும் ஃபெரோஸ்பூர் சென்றிருக்க வேண்டும்.

ஆனால், கடும் மழை பெய்ததால், ஹெலிகொப்டர் கிளம்ப முடியவில்லை. 20 நிமிடங்கள் காத்திருந்தும் நிலைமை சீரடையாததால், காரிலேயே செல்ல முடிவெடுத்தார். 110 கி.மீ.தூரம் சுமார் 2 மணிநேரம் பயணம் செய்ய வேண்டும்.

வழியில் பியாரியானா என்ற கிராமத்தில் ஒரு மேம் பாலத்தை பிரதமரின் வாகன அணிவகுப்பு அடைந்தபோது, அங்கே விவசாயிகள் நெடுஞ்சாலையை வழிமறித்துப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். வேறு வழியின்றி பிரதமரின் கார் நிறுத்தப்பட்டது.

இதர வாகனங்களும் பிரதமர் அணி வகுப்புக்கு நெருக்கமாக நின்றது. சமீப காலங்களில் எங்கும் நடக்காத அபாயச் சூழல். சுமார் 15 நிமிடங்கள் காரிலேயே காத்திருந்தும் போக்குவரத்து சீரடையாததால், அவரை விமான நிலையத்துக்கே திருப்பி அழைத்துச் சென்றனர் எஸ்.பி.ஜி.பாதுகாப்பு அதிகாரிகள்.

பொதுவாக பிரதமர் இவ்வளவு தூரம் காரில் பயணம் செய்வது வழக்கம் இல்லை. சில நிமிடப் பயணங்களுக்கு மட்டுமே கார். மற்றப்படி விமானம், ஹெலிகொப்டர்தான்.

அப்படி இருக்கும்போது இவ்வளவு தூரம் காரில் போக முடிவெடுத்தது யார்?

அதை ஏன் எஸ்.பி.ஜி. அதிகாரிகள் அனுமதித்தனர்? பிரதமர் காரில் செல்கிறார் என்றால், அந்தச் சாலையில் வேறு வாகனங்களோ, மனிதர்களோ குறுக்கிடக் கூடாது. அதை மீறி அங்கு எப்படிப் போராட்டம் நடைபெற்றது? சாலைகளில் எந்தக் குறுக்கீடும் இல்லாதபடி தடுப்பதற்குப் பஞ்சாப் பொலிஸ் தவறியது ஏன்?

இப்படி வரிசையாக எழும் கேள்விகள் அனைத்தும் பஞ்சாப் பொலிஸையும், பிரதமரின் எஸ்.பி.ஜி.பாதுகாப்பு அதிகாரிகளையும் குற்றம் சுமத்துகின்றன. மோடி பயணம் செய்வதற்காக என பிரத்தியேகமாக வாங்கப்பட்ட மெர்சிடிஸ் மேபேக், பி.எம். டபிள்யூ, ரேஞ்ச்ரோவர் போன்ற கார்கள் துப்பாக்கி, வெடிகுண்டு, ஏவுகணை, கண்ணிவெடி போன்ற தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பவை.

அதற்கு ஏற்றபடி சென்சார்களும், கூடுதல் கவசங்களும் பொருத்தப்பட்டவை. ஆபத்தான ஒரு சூழலில், டயர்கள் பஞ்சர் ஆனாலும், வேகம் குறையாமல் இயங்கும் திறன் படைத்தவை. ஆனால், பஞ்சாபில் அவர் பயணம் செய்த டொயோட்டா ஃபார்ச்சூனர் கார் இவ்வளவு பாதுகாப்பு வசதிகள் கொண்டவை அல்ல! அதில் அவர் பயணம் செய்ய எஸ்.பி.ஜி. அதிகாரிகள் ஒப்புக்கொண்டது ஏன் என்பதும் விமர்சிக்கப்படுகிறது.

பிரதமர் அணிவகுப்பு வழியில் எங்கும் நிற்கக் கூடாது. "ஒரு பாலத்தின் மீது அவர் கார் நின்றது இன்னும் அபாயகரமானது. ஒருவேளை அங்கு கண்ணிவெடி புதைக்கப்பட்டு இருந்திருந்தால் நிலைமை மோச மாகியிருக்கும்" என்று கூறுகிறார் முன்னாள்பொலிஸ்அதிகாரி கிரண் பேடி. பாதை தடைப்பட்டதும் உடனே பிரதமரின் அணிவகுப்பை அதிகாரிகள் திருப்பியிருக்க வேண்டும். பாகிஸ்தான் எல்லையில் இருக்கும் பகுதி அது.

பிரதமர் எந்த வாகனத்தில் வருகிறார், எந்த வழியாக வருகிறார், அவருடன் யார் போகிறார்கள், யார் யாரை அவர் சந்திக்கிறார், அவர் எங்கே தங்குகிறார் என்று எல்லாவற்றையும் ஆராய்வார்கள். பயணத்தில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் மாற்று வழியையும் திட்டமிட்டு வைத்திருப்பார்கள்.

பிரதமரின் பாதுகாப்புக்கு எஸ்.பி.ஜி.படையினர்தான் பொறுப்பு என்றாலும், அவர் பயணம் செய்யும் மாநிலங்களில் ஒட்டுமொத்தப் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பை மாநில அரசே ஏற்க வேண்டும். மாற்று ஏற்பாடுகளையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

அந்த வகையில் இந்தச் சாலையில் தடையற்ற பயணத்தை உறுதி செய்திருக்க வேண்டியது பஞ்சாப் பொலிஸின் பொறுப்பு. வெறும் 150 பேர் போராட்டம் நடத்தி பிரதமர் செல்லும் வழியை மறித்தார்கள். அதை உள்ளூர் பொலிஸ் தடுக்காமல் இருந்தது என்பதுதான் அதிர்ச்சியான விடயம்.

**ஜுனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எம்பயர் ஸ்டேட் கட்டடம்

உடனடியாக அதனை புருடென்ஷியல் இன்சூரன்ஸ் கம்பனி என்ற நிறுவனம் குத்தகைக்கு எடுத்துக் கொண்டது.

1954 ஆம் ஆண்டு கர்ணல் ஜே.கிரவுன் என்பவர் தலைமையிலான சிக்காகோ தொழிலதிபர்கள் குழு ஒன்று 51 மில்லியன் டொலருக்கு இக்கட்டடத்தை வாங்கியது.

1961 ஆம் ஆண்டு லாரன்ஸ் என்பவர் தலைமையிலான குழு 65 மில்லியன் டொலருக்கு எடுத்துக் கொண்டது.

1973 ஆம் ஆண்டு உலக வர்த்தக மையக் கட்டடம் மன்ஹாட்டனில் திறக்கப்பட்டது. உலகின் மிக உயர்ந்த கட்டடம் என்ற பெருமையை எம்பயர் ஸ்டேட் கட்டடத்திடமிருந்து அது பறித்துக் கொண்டது.

என்றாலும் 1986 ஆம் ஆண்டு அமெரிக்காவின் தேசிய வரலாற்று ஆய்வுப்பூங்கா என்பயர் ஸ்டேட் கட்டடத்தை வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டடமாக அறிவித்தது.

2002 ஆம் ஆண்டு பீட்டர் மார்கின்ஸ் என்பவர் 114 வருட குத்தகைக்கு எம்பயர் ஸ்டேட் கட்டடத்தை எடுத்துக் கொண்டார். அவருடன் இன்றைக்கு 2800 பங்குதாரர்களும் இணைந்துள்ளனர்.

இக்கட்டடத்தின் 86 ஆவது தளத்திலும் 102 ஆவது தளத்திலும் பொதுமக்கள் பார்த்து ரசிப்பதற்கான அவதானிப்பு நிலையங்கள் உள்ளன. அங்கிருந்து பார்த்தால் நியூயோர்க், நியூஜெர்சி, கனேக்டிகட், பென்சில்வேனியா, மசாசூசெட்ஸ் ஆகிய மாநிலங்களின் சுமார் 50 மைல் சுற்றளவு பிரதேசங்களை வானிலை தெளிவாக உள்ள நாட்களில் காண முடியும்.

86 ஆவது மாடி அவதானிப்பு நிலையம் வரை சுமார் 1576 படிகள் உள்ளன. கீழிருந்து 86 ஆவது மாடி வரை உள்ள படிகளைக் கடக்கும் ஓட்டப்பந்தயம் ஆண்டுதோறும் நடைபெறுகிறது. 9 நிமிடங்கள் 33 நொடிகளில் எம்பயர் ஸ்டேட் கட்டடத்தின் 1576 படிகளைக் கடந்த அவுஸ்திரேலியாவின்பால் கிரேஸின் சாதனை இன்றும் முறியடிக்கப்படவில்லை.

இக்கட்டடத்தின் மற்றுமொரு சிறப்பு அதன் வெளித் தோற்றத்துக்காக பொருத்தப் பட்டுள்ள மின் விளக்குகள் விசேடமான நாட்களில் அந்த நாளின் மகத்துவம் புலப்பட வித்தியாசமான நிறங்களில் மின் விளக்குகள் ஔிர்கின்றன. பொதுமக்கள் கூட குறிப்பிட்ட தொகை செலுத்தி மின் விளக்குகளை விருப்பப்பட்ட நிறங்களில் ஒளிரச் செய்யலாம்.

## உலகின் அதி உயரமான கட்டடம்

இன்றைக்கு உலகின் அதி உயரமான கட்டடமாக விளங்குவது அரபு எமிரேட்ஸில் உள்ள டுபாயின் புருச் காலிபா எனும் கட்டடம் தான். சுமார் 2722 அடி உயரம் உள்ள அந்தக் கட்டடம் 2010 ஆம் வருடம் ஜனவரி 4 ஆம் திகதி திறக்கப்பட்டது. 163 மாடிகள் கொண்ட பல்நோக்கு கட்டடத்தில் 925 குடியிருப்புகள், 9 உணவு விடுதிகள், 550 மீ.தூரம் பயணிக்கும் மின் தூக்கிகள், மிக உயரமான இடத்தில் அமைந்த நீச்சல் குளம், 24 ஆயிரம் யன்னல்கள் என்று பிரமாண்டத்தி ன் உச்சமாக காணப்படுகிறது.

இக்கட்டடம் பல திரைப்படங்களின் முக்கிய காட்சிகளில் இடம்பெற்று உள்ளது. 'கிங்காங்' ஹோலிவுட் திரைப்படத்தின் இறுதிக் காட்சியில் கிங்காங் குரங்கு கதாநாயகி யைத் தூக்கிக் கொண்டு இக்கட்டடத்தின் உச்சியில் நிற்கும். Sleepless Seattle, Manhattan உட்பட 50 திரைப் படங்களில் இக்கட்டடம் இடம் பெற்றிருக்கிறது.

1937 ஆம் ஆண்டு 49 வயதான ஆல்ட்ரிச் என்பவர் ஸ்பைடர்மான் போல் இக்கட்டடத்தின் தரைத் தளத்திலிருந்து உச்சிக்கு 36 நிமிடங்களில் ஏறிச் சாதனை புரிந்திருக்கிறார்.

இக்கட்டத்தை விட உயரமாக பல கட்டடங்கள் இப்போது கட்டப்பட்டுள்ளன. இன்று எம்பயர் ஸ்டேட் கட்டடம் உலகின் 22 ஆவது உயரமான கட்டடமாக இருக்கிறது. உலகின் 100 மாடிகளைக் கடந்து கட்டப்பட்ட முதல் கட்டடம் என்ற பெயர் தான் எம்பயர் ஸ்டேட் கட்டடத்திடம் எஞ்சி இருக்கிறது.

1945 ஆம் வருடம் ஜூலை 26 ஆம் திகதி இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற சமயம் பி-25 என்கிற குண்டுகள் வீசுகிற விமானம் ஒன்று யுத்த களத்திலிருந்து திரும்பும் போது அடர்ந்த பனிப்பொழிவு காரணமாக எம்பயர் ஸ்டேட் கட்டடத்தின் 79 ஆவது மாடியில் மோதி விட்டது. 14 பேரை பலி வாங்கிய அந்தச் சம்பவத்தில் இரண்டு மாடிகள் சேதமடைந்தன. பின் பல கோடி செல்வில் மறுசீரமைக் கப்பட்டன.

எம்பயர் ஸ்டேட் கட்டடத் தொழில்நுட்பம், பிரமாண்டம் மற்றும் அதன் வனப்பு காரணமாக உலக அதிசயங்களின் பட்டியலில் தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது.

(தொடரும்)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2489

**ரம்யா**

பொங்கல் வந்ததும் வந்துச்சு...



மூனு வேளையும் பொங்கலா சாப்பிடுறேன் இன்னும் தீர மாட்டேங்குது

**நிலஷ்ன்**

அடுப்படியில இருந்து நெய் வாசனை வருதே ஒருவேளை சுவீட் செய்யிறாங்களோ...



அய்யய்யோ....காலைல வச்ச பொங்கல சூடு பண்றானுங்களே...

**தாருஜன்**

மனைவி : ரிவில ஜல்லிக்கட்டு பார்க்குறிங்களே...
அவ்ளோ ஆர்வம்னா
நேரில போய் மாடு அடக்க
வேண்டியதுதானே

கணவன்: கட்டின மாட்டையே
அடக்க முடியல இதுல கட்டாத
மாட்டை எப்படி அடக்குறது?

**ஜறின்**




**ஷெர்லின்**



அவனை ஏண்ணே அடிச்சீங்க?
சிம்புவுக்கு டாக்டர் பட்டம் குடுத்த மாதிரி
நயன்தாரவுக்கு நர்ஸ் பட்டம்
குடுப்பாங்களான்னு கேட்குறான்பா

**சியான்**

சகோதரியின் பொங்கல் தயாரிப்பு




அம்மா பொங்கல் ஏன் பொங்கவே மாட்டேங்குது



பொங்கலா இருந்தா பொங்கும்
பச்சத்தண்ணி எப்டி பொங்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

274

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## நாம் தொலைத்து விட்ட அமைதியும் ஆரோக்கியமும் நிறைந்த உலகம் உருவாக...

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கணிப்பீட்டின் மூலம் மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களில் 25 சதவீதமான நோய்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுற்றாடல் மாசடைவதனால் ஏற்படுகின்றது என்பது அறியப்பட்டிருக்கின்றது. சுற்றாடல் மாசடைவதற்குத் தேவையற்ற சத்தங்கள் ஒரு முக்கிய காரணியாக அமைகின்றது.


எமது பிரதேசங்களில் சூழல் மாசடைவதற்குக் காரணமாக இருக்கும் பிரதான சத்தங்களாக வாகன இரைச்சல், வாகனங்களில் இருந்து ஏற்படுத்தப்படும் கோன் ஒலி, வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டிகளில் இருந்து வெளிவரும் சத்தங்கள், வீட்டு உபகரணங்கள், ஜெனரேட்டர்கள் போன்றவற்றினால் ஏற்படும் சத்தங்கள், ஒலி பெருக்கிகளினால் ஏற்படுத்தப்படும் சத்தம், இயந்திரங்களின் சத்தம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறான சத்தங்களினால் எமது சுற்றாடலில் அமைதித் தன்மை குலையும் பொழுது இது மனிதர்களில் பல்வேறுபட்ட தாக் கங்களை ஏற்படுத்துகின்றது.

இத்தாக்கங்களினால் ஏற்படும் விளைவுகளில் முக்கியமானவையாக மன அழுத்தம், மனச்சோர்வு, ஞாபகமறதி, நித்திரைக்குழப்பம், உயர் குருதி அமுக்கம், இருதய நோய்கள், மாரடைப்பு, கேட்கும் திறன் குறைவடைதல், கல்விகற்றல் திறன் குறைவடைதல், இலகுவில் நோய் வாய்ப்படுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

தெருக்களிலே எமது வாகனங்களில் இருந்து எழுப்பப்படும் கோன் ஒலிகளில் 95 சதவீதமானவை அநாவசியமாக எழுப்பப்படுகின்றன. நல்ல முறையில் வாகனத்தைக் கட்டுப்படுத்தும் திறனும், மன அமைதியும், சுயநலமற்ற மனப்பாங்கும் இருந் தால் நாம் தேவையற்ற கோன்களை தவிர்த்துக் கொள்ளலாம். எமது கோபத்தையும், மனப்பதற்றத்தையும், அவசரத் தன்மையையும் வெளிக் காட்ட சிலசமயம் கோன் அடித்தபடியே செல்கின்றோம். ஒவ்வொரு தடவையும் கோனில் கைவை க்க முன்பு எமது மனதில் கைவைத்துப் பார்ப்போம். நிச்சயமாக எம்மால் அநாவசிய கோன்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

எமது வாகனங்களின் சைலென்சர்களை நல்ல முறையில் பேணுவோம். இதன்மூலம் வாகன இரைச்சல்களைக் குறைக்கமுடியும். ஒவ்வொரு மனிதனும் தெருக்களிலே பலமணி நேரங்களைச் செலவிடுகின்றான். பலமக்கள் தெருவோரம் குடியிருக்கிறார்கள். எனவே தெருக்களில் ஏற்படும் சத்தங்களைக் குறைப்பதன் மூலம் மக்களிற்கு ஏற்படும் தாக்கங்களைக் குறைத்துக் கொள்ள முடியும். வீடுகளில் தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றின் சத்தங்களை இயலுமானவரை குறைத்து வைத்துக் கொள்வோம். தேவையற்ற நேரங்களில் அவற்றை நிறுத்தி விடலாம். வீட்டு உபகரணங்கள் உதாரணமாக கிறைண்டர், மோட்டர், மின் பிறப்பாக்கி போன்றவற்றைத் தெரிவு செய்யும் பொழுது அவற்றின் விலை, தராதரம் என்பவற்றைக் கருத்தில் கொள்வது போன்று அவை போடும் சத்தத்தினையும் கருத்தில் எடுத்து குறைந்த சத்தத்துடன் இயங்கும் உபகரணங்களைத் தெரிவு செய்து கொள்வோம். மின்விசிறிகள் இயங்கும் பொழுது அவற்றிலிருந்து சத்தம் வெளிப்படின் அவற்றை நல்லமுறையில் திருத்திக் கொள்வோம். வணக்கஸ்தலங்களிலும், பொது இடங்களிலும் அநாவசியமாக ஒலி பெருக்கிகளை இயங்கவைப்பதன் மூலமும் அச்சுற்றாடல் மாசுபட்டு மக்களுக்கு தாக்கங்கள் ஏற்பட்டுவருகின்றன. மக்களை நோயாளிகளாக்கும் எந்த நடவடிக்கைகளையும் இறைவன் விரும்பமாட்டான் என்பதை மனதில் நிறுத்துவோம்..



சிறு பிரச்சினைகளுக்கும் சத்தம் போட்டுப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்வோம். தன்வலிமையால் மற்றவனை அடக்குபவன் உண்மையான பலசாலி அல்ல. மாறாக கோபம் வரும்போது தன்னை அடக்கிக் கொள்பவனே உண்மையான பலசாலி ஆவான்.



இனிய இசை கேட்டல், நம்பிக்கை தரும் நூல்களை வாசித்தல், சற்றுநேரம் வெளியே உலாவி வருதல், சம வயதுடைய நண்பர்களுடன் அளவளாவுதல், குடும்பத்தாருடன் மனம் விட்டுப் பேசுதல், குழந்தைகளோடு குழந்தைகளாக விளையாடல் இவையாவும் பதற்றத்தைக் குறைக்க உதவும். அமைதி ஆரோக்கியம் தரும்.

அன்று இயற்கையோடு ஒன்றி இனிமையாய், அமைதியாய் இருந்த எமது சுற்றாடல் பல்வேறுபட்ட தேவையற்ற சத்தங்களினால் குழப்பம் அடைந்து, மாசுபட்டு, மனிதர்களை நோயாளிகளாக மாற்றிக் கொண்டிருக்கும் அவலம் நடந்து கொண்டிருக்கிறது.

இத் தாக்கங்களில் இருந்து எம்மை நாம் தற்காத்துக் கொள்ள முடியும். மாற்றம் என்பதை தவிர எல்லாமே மாறக் கூடியது நாம் மனது வைத்தால். நாம் தொலைத்து விட்ட அமைதியும் ஆரோக்கியமும் நிறைந்த உலகம் உருவாகும் என நம்புவோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themihealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org